Registered as a Newspaper in Ceylon ★ ★ விலை சதம் 10

# ஈழநாடு

THE EELA NADU

தேசியதினசரி National Tamil Daily

மலர் 8 (17-10-66) இதழ் 247

பராபவ ஐப்பசி | ஜமாதுல் ஆகிர் 2 | திங்கட்கிழமை

மின்னும் வைரங்களுக்கும்
தங்கப்பவுண் நகைகளுக்கும்
AKS
போன்: 519
நகை மாளிகை
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

## இனப்பாகுபாடு எதிர்ப்பு தினம்

ஐ. நா., நியுயோர்க், அக். 16

ஒவ்வொரு வருடமும் மார்ச் 21-ந் திகதியை இனப் பாகுபாடு எதிர்ப்புத் தினமாகக் கொண்டாட ஐ. நா. பொதுச்சபை தீர்மானித்துள்ளது.

இத்தீர்மானத்துக்கு 88 நாடுகள் சாதகமாக வாக்களித்தன. தென்னாபிரிக்கா மட்டும் எதிர்த்து வாக்களித்தது. போர்ச்சுக்கல் வாக்களிக்கவில்லை.

(8-ம்பக்கம் பார்க்க)

# "நாட்டைப் பிரிப்பது நமது நோக்கமல்ல

## சமாதான சகவாழ்வே தமிழரசு இலட்சியம்"

### வெலிமடையில் அமைச்சர் திருச்செல்வம்

நுவரெலியா, ஞாயிறு

"நாட்டைப் பிரிக்கும் நோக்கம் தமிழரசுக் கட்சிக்கு ஒருபோதும் கிடையாது. சிங்கள மக்களுடன் சமாதானமாக வாழ்வதே எங்கள் இலட்சியம்" என்று உள்ளூராட்சி அமைச்சர் திரு. எம். திருச்செல்வம் வெலிமடைத் தொகுதியில் ஒரு வைபவத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.



தென்னக்கும்பர கிராம சபைக் கட்டடமொன்றுக்கு அத்திவாரக்கல் நாட்டுவைபவமொன்றில் அமைச்சர் திருச்செல்வம் கலந்துகொண்டு பேசுகையில், தமிழரசுக்கட்சியின் கொள்கைக்கு முழுமாறான கொள்கையைக்கொண்டிருந்த ஜாதிக விமுக்திப்பெரமுனையின் தலைவர் திரு. கே. எம். பி. ராஜரத்னா ஒன்பது வருடங்கள் பிரதிநிதித்துவம் வகித்த வெலிமடைத் தொகுதியில் தமக்கு அமோக வரவேற்பளிப்பதைக்கண்டு தாம் மகிழ்ச்சியடைவதாகக் கூறினார்.

"தமிழரசுக் கட்சி அங்கத்தவர்கள் வஞ்சகம் கொண்டவர்களல்லர். அதேபோன்று தமிழரசுக்கட்சிக்கொள்கையும் சூதுவாது அற்றது. நாட்டைப் பிரிக்கும் நோக்கம்கொண்டிருப்பதாக சிலர் எங்களைப்பற்றிக் கூறுகின்றனர். அந்த நோக்கம் எங்களுக்குக்கிடையாது. பெரும்பான்மைச் சமூகத்தினரின் விருப்பத்துக்கு எதிராக நடந்துகொள்ளும் எண்ணமும் எமக்கு இல்லை. சமாதான சகவாழ்வே எமது இலட்சியம். இதில் தமிழரசுக்கட்சி வெற்றியுமடைந்துள்ளது. தமிழ் அமைச்சர் ஒருவர் என்ற முறையில் நான் இங்கு விஜயம் செய்திருக்கிறேன். எனக்கு இங்கு அளிக்கப்பட்ட வரவேற்பு சமாதானத்துக்கும் ஐக்கியத்துக்கும்

(5-ம் பக்கம் பார்க்க)

## தேசிய அரசாங்கம் ஒழிந்தால் சர்வாதிகாரம் வரும்

### தொழிலாளர் கூட்டத்தில் எச்சரிக்கை

கொஸ்லாந்தை, ஞாயிறு

"தேசிய அரசாங்கம் இந்நாட்டில் அழிந்தால்சர்வாதிகாரம்தலைதூக்கும். எனவே தேசிய அரசாங்கத்தை வாழவைத்து சிறுபான்மையினராகிய தோட்டத் தொழிலாளிகளான எமது கோரிக்கைகளை நிறைவேற்றிக் கொள்ளவேண்டும்.

இவ்வாறு அப்புத்தளை இலங்கை தொழிலாளர்காங்கிரஸ் அலுவலக மண்டபத்தில் நடைபெற்ற தலைவர்கள், மாதர்கள், தொண்டர்கள், கமிட்டித் தலைவர்கள் அடங்கிய கூட்டமொன்றில் பதுளை மாநிலப் பிரதிநிதி திரு. எம். சுப்பையாபேசும்போது கூறினார்.

திரு. எம். எம். ஜெயின் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. எம். சுப்பையா மேலும் பேசும்போது பிரச்னைகளைத் தீர்த்துக்கொண்டு நிம்மதியாக வாழ நமக்கொரு அரசாங்கம் தேவையென்றால் அது தேசிய அரசாங்கமாகவேதான் இருக்க வேண்டும். தேசிய அரசு அழிந்தால் சர்வாதிகாரம் மூலம் ஜனநாயகம் அழிந்து நாடுசின்னாபின்னமாகி விடும் என்றார்.

## அதிகாரிகளில் சிலர் இடையூறாக இருக்கின்றனர்

### வசதிகள் பெறுவதில் உள்ள கஷ்டங்கள் பற்றி எம். பி.

கிளிநொச்சி, சனி

நாம் தேசிய அரசாங்கத்துடன் சேர்ந்துவிட்டாலும் பல வசதிகளைப்பெற துவேஷ மனப்பான்மையுள்ள அதிகாரிகள் இடையூறாக இருக்கின்றார்கள். அதுவும் கல்வித்துறையில் தான் இப்படியான நடத்தைகள் மலிந்து கிடக்கின்றன. இப்பகுதி கல்வி முன்னேற்றம் கருதி பல திட்டங்களை நான் கல்வி இலாகாவுக்குச் சமர்ப்பித்துள்ளேன். இவற்றை நடைமுறைப்படுத்தவும் ஆவன செய்வேன்.

இவ்வாறு கிளிநொச்சிப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. வா. பொ. இரத்தினம் கிளிநொச்சி மகா வித்தியாலய பெற்றோர் ஆசிரிய சங்கக்கூட்டத்தில் பேசும்போது கூறினார்.

இக்கூட்டத்தில் மகாவித்தியாலயத்தின் விருத்தி சம்பந்தமாக பல விஷயங்கள் ஆராயப்பட்டன.

மற்றும் மகாவித்தியாலய தலைமை ஆசிரியர் உட்பட பலரும் பேசினர்.

## நிந்தகம் மசோதாவுக்கு எதிர்க்கட்சியினர் பயம்

### காணிச் சொந்தக்கார சிறிமா பற்றி பிரதமர் டட்லி

காலி, ஞாயிறு

எல்பிட்டியாவில் நேற்று நடைபெற்ற யு. என். பி. தேர்தல் பிரசாரக்கூட்டம் ஒன்றில் பேசுகையில், திருமதி பண்டாரநாயக்கா தலைமைவகிக்கும் எதிர்க்கட்சி, பாரிலிமெண்டில் நிந்தகம் மசோதா விவாதிக்கப்படுவதையொட்டியே ஜனப்பிரதிநிதிகள் சபையைப் பகிஷ்கரித்துவருவதாக பிரதமர் டட்லி சேனநாயக்கா கூறினார். திருமதி பண்டாரநாயக்கா ஆயிரக்கணக்கான ஏக்கர் காணிக்குச் சொந்தக்காரரென்றும், இம் மசோதாவின்கீழ் அவர் அவற்றை இழக்கநேரிடும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். யு. என். பி. அபேட்சகர் திரு. கொலின் சமரநாயக்காவை ஆதரித்து நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் பேசுகையிலேயே பிரதமர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியதாவது: "திருமதி பண்டாரநாயக்கா தமது தேர்தல் ஆட்சிக்காலத்தில் வழக்கில் சாட்சியமளிக்கையில், 1965ல் கூட்டரசாங்கம் அமைத்தால் அவர்கள் தமது சார்பில் [illegible] தமிழரசுக்கட்சியினரின் ஆதரவை நாடியதாக ஒப்புக்கொண்டுள்ளார். இப்பொழுது, நாம் தமிழரசுக்கட்சியுடன் சேர்ந்து தேசிய அரசாங்கத்தை உருவாக்கியிருப்பதை அவர் எதிர்த்துவருகிறார். 1965ல் தமிழரசுக்கட்சி அவரை ஆதரிக்க மறுத்துவிட்டது. அவர் 1965ல் அவர்களைத் தவறான வழியில் நடத்திவிட்டார்.

தனிச் சிங்களச் சட்டத்தின் ஒரு சொல்லைத் தானும் மாற்றமாட்டேன். இப்பொழுது நாடு பூராவும் சிங்களமே ஒரே உத்தியோக மொழியாக உள்ளது. ஆகத்

(5-ம் பக்கம் பார்க்க)

## பண்டாரவளையில் தீவிர தேர்தல் பிரசாரம்

கொஸ்லாந்தை ஞாயிறு

பண்டாரவளை இடைத்தேர்தல் தினம் நெருங்க நெருங்க தேர்தல் பிரசாரம் உச்சக்கட்டத்தை அடைந்து வருகிறது.

ஐக்கிய தேசிய கட்சிசார்பில் அபேட்சகராகப் போட்டியிடும்திரு. கிவில் மத்யூவை ஆதரித்து பிரச்சாரம்செய்ய தேசிய அரசாங்க மந்திரிகளும் பாராளுமன்ற உறுப்பினர்களும் தினந்தோறும் பண்டாரவளை நோக்கிவந்த வண்ணம் இருக்கிறார்கள்.

இதுவரை ராஜாங்க அமைச்சர் திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனா, உணவு அமைச்சர் திரு. எம். டி. பண்டா, திரு. சி. பி. டி. சில்வா ஆகியோரும் பல பாராளுமன்ற உறுப்பினர்களும் தமிழரசுக்கட்சி உறுப்பினராகிய சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினமும் முழுமூச்சாக பிரசாரத்தில் ஈடுபட்டிருந்தனர்.

பிரதம மந்திரி திரு. டட்லி சேனநாயக்கா இவ்வாரத்தில் இரண்டுநாள் பண்டாரவளையில் தங்கி பல கூட்டங்களில் கலந்துகொள்ள விருக்கிறார். இக்கூட்டங்களில் பல மந்திரிகளும் இ. தொ. கா. தலைவர் திரு. எஸ். தொண்டமான் எம். பி. யும் கலந்துகொள்வரென எதிர்பார்க்கப்படுகிறது.

தோட்டத் தொழிலாளர்கள் யு. என். பி. யையே ஆதரித்து வாக்களிக்க வேண்டுமென தோட்டப் பகுதிகளில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ்பிரசாரத்தில்முழுமூச்சாக இறங்கியுள்ளது.

ஜனாப் அஸீஸ் தலைமையிலுள்ள ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் இதுவரை தேசிய அரசாங்கத்தை ஆதரித்தோ இடதுசாரிகளை ஆதரித்தோ கூட்டங்களில் பேசவோ பத்திரிகைகளுக்கு அறிக்கை விடவோ இல்லை.

எதிர்க்கட்சிகளின்சார்பில் திரு. மைத்திரிபால சேனநாயக்கா எம். பி. பண்டாரவளையிலே தங்கி தேர்தல் வேலைகளில்ஈடுபட்டுள்ளார். இவ்வார நடுப்பகுதியில் எதிர்க்கட்சித்தலைவி திருமதி சிறிமா பண்டாரநாயக்கா பண்டாரவளைக்கு விஜயஞ்

(8-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### தேவை

**ஜயலின்**
நல்ல நிலையில் அல்லது சிறிது பழுதடைந்த நிலையிலுள்ள வயலின் தேவை. க. கணேசலிங்கம், 40, சிவன் பண்ணை வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம். 1429

**விற்பனையாளர்:**
எங்கள் உடுப்புக்களை வீடு வீடாய்ச் சென்று விற்பனை செய்வதற்கு விற்பனையாளர் தேவை. பிணைப்பணம் ரூபா 100/-. இருபாலாரும் நேரில் விண்ணப்பம் செய்யலாம். அரஸ்கோ உடுப்புத் தொழிற்சாலை, 43, கிராண்ட் ரோட், யாழ்ப்பாணம். 1425

**மனேச்சர்!**
கைதடி நுணுவில் மட்டுவில் தெற்கு ஐக்கிய பண்டகசாலைக்கு 1-11-66 தொடக்கம் மனேச்சர் தேவை. 26க்கும் 40க்கும் இடைப்பட்ட வயதும் க. பொ. (ஜே. எஸ். ஸி.) தராதரமும் வியாபார அனுபவமும் வேண்டும். கூட்டுறவுக் கல்விப் பயிற்சி விரும்பத்தக்கது. மாதம் எழுபத்தைந்து ரூபா வேதனம் கொடுக்கப்படும். வேலைத் திறமை நோக்கிக் கூட்டிக் கொடுக்கப்படும். ஐந்நூறு ரூபா காசுப்பிணையும் ஆயிரம் ரூபாவுக்கு ஆதனப் பிணையும் கொடுக்கவேண்டும். நிபந்தனைகளுக்கு அமைவாக [illegible] காரியதரிசிக்கு [illegible] பிக்கவும். க. சின்[illegible]துரை, காரியதரிசி, கைதடி நுணுவில், சாவகச்சேரி. 16-10-66. 1427

**சித்தவைத்தியர்**
பதிவு பெற்ற ஆயுர்வேத சித்த வைத்தியர் உடன் தேவை, ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம் விலாசம்: அருள்நெறி மன்றம் வைத்திய சாலை, க. பரமானந்தம், ச. ஐயாச்சாமிக் குருக்கள் மே/பா, பிரதான வீதி, காங்கேசன்துறை. 1430

**வேலைபழகுபவர்கள்**
வேலை பழகுவதற்கு 18 வயதிற்குட்பட்டவர்கள் தேவை. நேரில் வரவும். கொழும்பு ஸ்ரூடியோ, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 1415

### தேவை

**தொழிலாளர்**
அக்கராயன்குள வாய்க்காலில் வேலை செய்ய கரும்புத்தோட்டத் தடியில் தொழிலாளர் தேவை. நிந்தவூர் முஸ்லிம்கள் தினம் (ஒருவர்) 12/-க்கு மேல் சம்பாதிக்கிறார்கள். விதலத்தில் விண்ணப்பிக்கவும். விவேகானந்தன், இளைப்பாறிய என்ஜினீயர். 1416


புதுக்குடியிருப்பு, சனி
முக்கிலததிவில் இருந்து புதுக்குடியிருப்புக்கு வந்த பஸ்ஸின் பின்பக்கம் திடீரென பாலத்தில் மோதியதால் பஸ் நடுரோட்டிலேயே நிற்க வேண்டியதில் ஏற்பட்டதுமல்லாமல் பிரயாணிகளும் செல்ல வேண்டிய இடங்கட்கு நடையிலேயே சென்றனர்.




## கொழும்பு
**திங்கள் 17 - 10 - 66**

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

**344 மீற்றர் & 61 மீற்றர்**
காலை 6-45 நாதாஞ்சலி, 6-50 சைவநற்சிந்தனை, 6-55 கிறிஸ்தவ நற்சிந்தனை, 7-15 துதிப்பாடல்கள், 7-20 சத்திப்பாடல்கள், 7-30 குரல்வகை, 7-45 திரைஇசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

**344 மீற்றர் & 49 மீற்றர்**
பகல் 12-00 ஒத்திரகானம், 1-00 தெம்மாங்கு இசை.

**344 மீற்றர் & 61 மீற்றர்**
மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 படத்திலிருந்து.
இரவு 6-15 இராமசஞ்சிகை, 6-45 நிலைய ஒலிப் பதிவுகள், 7-30 கலைக்கோலம் — பலகலைமதிப்பு, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 வாத்தியஇசை, 9-30 தமிழ் மூலம் சிங்களம், 9-45 மனநிலைச்சித்திரம், 10-15 நேயர்விருப்பம்.

# அரசியல் நோக்கத்துக்காக இயக்கம்பயன் படக்கூடாது
## சிறுபான்மைத்தமிழர் ஐக்கிய முன்னணிக்கு யாழ். கம்யூனிஸ்ட் காரியதரிசி எச்சரிக்கை

யாழ்ப்பாணம், ஞாயிறு
''தமிழ் மக்களின் சமகால முன்னேற்றத்திற்கு ஓர் மாபெரும் முட்டுக்கட்டையாகவும் அவர்களின் பாரம் பரியத்திற்கு ஓர் கறையாகவும் இருந்து வரும் சமூகக் குறைபாடுகளை நீக்குவதற்கு சிறுபான்மைத் தமிழர் ஐக்கிய முன்னணி சாத்வீகமான ஓர் இயக்கத்தை ஆரம்பிக்கப் போவதாக எடுத்துள்ள தீர்மானத்தை கம்யூனிஸ்ட் கட்சி வரவேற்கின்றது'' என்று இலங்கைக்கம்யூனிஸ்ட் கட்சி யாழ் பிரதேசக்கிளையின் காரியதரிசி திரு. ஐ ஆர். அரியரத்தினம் விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார். அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

''சிறுபான்மைத் தமிழர்களின் நியாயமான உரிமைகளுக்காக கம்யூனிஸ்ட்கட்சி அதன் ஆரம்பகாலந் தொட்டே மிகவும் உறுதியாகவும் தொடர்ந்தும் போராடிவந்துள்ளது. எமது கட்சியின் பிரபலம் வாய்ந்த தலைவராயிருந்த காலஞ்சென்ற பொன். கந்தையா இவ்விடயத்தில் மேற்கொண்ட நடவடிக்கை காரணமாகவும் அவரின் விடாமுயற்சி காரணமாகவும் 1957-ம் ஆண்டு பாராளுமன்றத்தில் ''சமூகக்குறைபாடுகளைத் தடைசெய்யும் சட்டம் நிறைவேற்றப்பட்டது. சிறுபான்மைத் தமிழர்கள் சமூக நீதிபெறுவதற்காக நடாத்திய இயக்கங்களை மற்றும் அரசியல் கட்சிகள் வெறுப்பான கண்ணோட்டத்தோடு பார்த்ததுமல்லாமல் இடதுசாரிக்கட்சியினர் சிறுபான்மைத் தமிழர்கள் மத்தியில் வேலைசெய்து வந்ததைப் பயத்தோடும் சந்தேகத்தோடும் அவதானித்த காலம் ஒன்றுண்டு. அக்காலம் இப்பொழுது இறந்த காலமாகிவிட்டது. இப்பொழுது தமிழரசுக் கட்சித் தலைவர்களும் சாதிவித்தியாசத்தை ஒழிக்கவேண்டுமென்ற இந்த இயக்கத்தைப் பகிரங்கமாக முன்வந்து ஆதரிக்கின்றார்கள். ஆகவே சிறுபான்மைத் தமிழர் ஐக்கிய முன்னணித் தலைவர்கள் மிகவும் பொறுப்பான முறையில் செயல்பட்டு அரசியல் வேறுபாடின்றி இந்த இயக்கத்தை ஆதரிக்கின்ற சகல சக்திகளின் ஆதரவையும் பெற முயற்சிக்கவேண்டும். அதே நேரத்தில் இவ்வியக்கத்தைத் தமது அரசியல் சுயநல நோக்கங்களுக்காகப் பாவிப்போர்களைப் பற்றியும் அரசியல் ஆரம்பசூரத்தனச் சாகசக்காரர்கள் பற்றியும் மிகவும் கவனமாகவும் எச்சரிக்கையாகவும் இருக்கவேண்டும்.

சுழிபுரம், ஞாயிறு
பொன்னாலை சிரமதான இயக்க வாலிப முன்னணியினர் ஒரு துண்டுப்பிரசுரம் வெளியிட்டுள்ளனர். அப்பிரசுரத்தில் குளாய் மூலம் குடிநீர் விநியோகமும் அதனால் ஏற்பட்ட பலாபலன்களும் சாதிப் பாகுபாடற்ற ஆக்க வேலைகளும் பற்றி விளக்கப்பட்டுள்ளன.


## விளம்பரம்

### 1-ம் நம்பர் வெற்றுமாச் சாக்குகள் விற்பனை

யாழ். மாவட்ட கூட்டுறவுத்துறைமுகச் சேவைச் சமாஜத்தில் 1-ம் நம்பர் வெற்றுமாச் சாக்குகள் கிட்டத்தட்ட 30,000 விலைக்கு இருக்கின்றன. அதில் 10,000 கீழ் கொடுக்கப்பட்ட விலாசத்திலும், மிகுதி 20,000 கன்றுகம் என். டி. ஏ. பி. வி. யூனியன் ஸ்ரோரிலும் இருக்கின்றன. கந்தோர் நேரங்களில் பார்வையிடலாம். கேள்விப்பத்திர மூலம் விலைகளை 20-10-66 வியாழக்கிழமை பிற்பகல் 1 மணிக்குப் பிந்தாமல் சமர்ப்பிக்கவும். எதிர்பார்க்கும் விலைக்குக்குறைந்தால் விற்காமல் விடும் உரிமை எமக்குண்டு.

யா. மா. கூ.
து. மு. சே. சமாஜம்,
25, மூன் வீதி,
1334 யாழ்ப்பாணம்.

### யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
### வருடாந்த பரிசளிப்பு விழா

புதன்கிழமை 19-10-66 மாலை 6 மணிக்கு


பிரதம விருந்தினர்: திரு. எஸ. தணிகாசலம்
(வித்தியாதிபதி, வடமாநிலம்)

பெற்றோர், பழைய மாணவர், நண்பர்கள், யாவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

யா. இ. க.
17-10-66 1331

### 3வது வெற்றி வாரம்!

கிங்ஸலி (கொழும்பு), பிளாஸா (வெள்ளவத்தை), நவம் (கொட்டாஞ்சேனைத்தெரு)
விஜிதா (தெஹிவளை), விஜயா (மட்டக்களப்பு), ஸ்ரீ கிருஷ்ணா (திருமலை)
மொடோர்ண் (பண்டாரவளை), வெலிங்டன் (காத்தான்குடி)
தீவொளி (நுவரெலியா), கல்யாணி (தலவாக்கலை)



எம். ஜி. ஆர்., கே. ஆர். விஜயா
சௌகார் ஜானகி, நாகேஷ், பாலையா
மற்றும் பலர் நடிக்கும்
ஆர். ஆர். பிக்சர்ஸ்

## பணம் படைத்தவன்

## நவராத்திரி பூஜைக்கு
### தேவையான

- அபிஷேகத் திரவியங்கள்
- அபிஷேகச் சந்தனம்
- அபிஷேகக் குங்குமம்
- அபிஷேக விபூதி
- அபிஷேக வாசனைதிகள்
- கற்பூரம், சாம்பிராணி ஊதுபத்திகள்

மற்றும்

சகல சாமான்களும் நிதானமான விலையில் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

கடந்த 33 ஆண்டுகளாக நற்சேவை புரிந்து நற்பெயர் பெற்றவர்கள்.

### எஸ். சுப்பிரமணியம் அன் கொம்பனி

மருந்து, மருந்துச்சரக்கு, வாசனைதிகள் இறக்குமதியாளர்களும் மொத்த, சில்லறை வியாபாரிகளும்.

53, காங்கேசன்துறை வீதி, பெரியகடை, யாழ்ப்பாணம்.
போன்: 541
Residence: 7068

"பாலேந்திரா பில்டிங்"
160, செட்டியார் தெரு,
கொழும்பு-11.

### நியூ காலிங்கன்
(இணுவில்)
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறை தினங்களில் 2-30 மணி
சிவாஜி - தேவிகா நடித்த
**பழநி**

### மகாத்மா தியேட்டர்
(தெல்லிப்பழை)
தினசரி 6-30, 9-30
போயா தினங்களில் காலை 10 மணி
சிவாஜி — சாவித்திரி நடித்த
**திருவிளையாடல்**

### REGAL—JAFFNA
NOW SHOWING
TONY CURTIS, KIRK DOUGLAS, AND BURT LANCASTER
in
THE LIST OF ADRIAN MESSENGER

### ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 3-30, 6-30, 9-45
போயா தினங்களில் 4 காட்சிகள்
ZARAAK KHAN
(HINDI)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர் பொறுப்புணர்ச்சியுடன் நடந்துகொள்ள வேண்டும்

## கோரிக்கைகளை ஆராய்வதாக பிரதமர் இந்திரா வாக்குறுதி

புதுடில்லி, ஞாயிறு

மாணவர்கள் தமது குறைபாடுகளைத் தெரிவிக்கையில் பொறுப்புணர்ச்சியுடன் நடந்துகொள்ள வேண்டுமெனப் பாரதப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி வலியுறுத்தினர். மாணவர் குறைகளைத் தாம் புரிந்து கொண்டிருப்பதாகவும், அவர்களுக்காகத் தாம் பரிவுகாட்டுவதாகவும் மேலும் தெரிவித்த அவர், அதேநேரத்தில் மாணவர்கள் அரசாங்கத்துக்குள்ள பொறுப்புகள், கடமைகள் பற்றிச் சிந்தித்துக் கட்டுப்பாடுடன் நடக்கப் பழகிக்கொள்ளவேண்டுமென்று கூறினர்.

மாணவர்கள்சபைப் பிரதிநிதிகள் குழுவொன்று நேற்றுப் பிரதமரைச் சந்தித்துப் பேசியபோதே, பிரதமர் இந்திரா மேற்கண்டவாறு கருத்துத் தெரிவித்திருந்தார். அவரைச் சந்தித்த மாணவர்கள் குழுவில், பல்கலைக்கழக மாணவர் தேசிய சபையின் பிரதிநிதிகளும் அடங்கியிருந்தனர்.

### மாணவர் கோரிக்கைகள்

இம் மாணவர்குழு பிரதமரிடம் ஒரு மகஜரைச் சமர்ப்பித்தது. அம் மகஜரில் பின்வரும் முக்கிய கோரிக்கைகள் வெளியிடப்பட்டன. (1) மாணவர்களை நிபந்தனையின்றி விடுதலை செய்ய வேண்டும். (2) பொலிசார் தடியடி, பலாத்கார நடவடிக்கைகள் மாணவர்க்கெதிராகப் பிரயோகிக்கப்படுவது நிறுத்தப்படவேண்டும். (3) பல்கலைக்கழக வளவுக்குள் பொலிசார் அனுமதிக்கப்படாது.

இவர்களுடைய கோரிக்கைகளைத் தாம் கவனிப்பதாக மாணவர் குழுப் பிரதிநிதிகளிடம் தெரிவித்த பிரதமர், பொலிசார் அத்துமீறி நடந்துள்ள சம்பவங்கள் பற்றியும் தாம் விசாரிப்பதாகவும், ஆனல், அரசாங்கத்துக்கு இடையூறு விளைவிக்கும்வகையில் மாணவர்கள் கடமையற்றமுறையில் நடந்துகொள்வதை அரசாங்கம் அனுமதிக்காது என்பதையும் திட்டவட்டமாகக் கூறிவைத்தார்.

பிரதமர் தமது கோரிக்கைகளைக் கவனிப்பதுபற்றி வாக்குறுதி அளித்திருப்பது தமக்குத் திருப்தியளித்துள்ளதாக மாணவர் குழு அபிப்பிராயப்பட்டதாக இங்கு அறிவிக்கப்பட்டது.

### டில்லியில் மாநாடு

மாணவர் பிரச்னைகளுக்கு ஒரு நிரந்தர அடிப்படையில் தீர்வுகாண்பதற்கான வழிவகைகளை ஆராய்வதற்குப் பல்கலைக்கழகத் துணைத் தலைவர்களும், கல்வி நிபுணர்களும் இன்று டில்லியில் கூடுகிறார்கள். இம் மாநாடு மூன்று நாட்களுக்குத் தொடர்ந்து நடைபெறும்.

இம் மாநாட்டுக்கு அலகபாத் ஆசிரியர் சங்கம் அனுப்பியுள்ள குறிப்பொன்றில், மாநாட்டில் மாணவர், ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகளையும், அரசாங்க அரசியல் கட்சிப் பிரதிநிதிகளையும் பங்குபற்ற அனுமதி அளிக்குமாறு வேண்டிக் கொண்டுள்ளது.

# ஐ. நா. பாதுகாப்பு சபையில் இந்தியா

ஐ. நா. (நியூயோர்க்) ஒக். 16

இம்மாதஇறுதியில் ஐ. நா. பாதுகாப்புச்சபைக்கு நடைபெறும் தேர்தலில் முதல் வாக்கெடுப்பின் போதே இந்தியா ஒரு ஆசனத்தைக் கைப்பற்றிக் கொள்ளலாமெனத் தெரிகிறது.

பத்து நிரந்தரமற்றஆசனங்களில் ஐந்துக்கு இவ்வருடம் போட்டி நடைபெறுகிறது. ஜோர்தான் விலகியுள்ள ஆசியஆசனத்துக்கு இந்தியாவுடன் சிரியாவும் பாகிஸ்தானும் போட்டியிடுகின்றன.

இந்தியாவுக்கு மேற்குநாடுகள் மற்றும் ஆசியா, ஆபிரிக்க, லத்தீன், அமெரிக்கா நாடுகள் பலவற்றின் ஆதரவு கிடைத்துள்ளது முதல் வாக்கெடுப்பிலேயே அது தேர் தெடுக்கப்படுமென்ற நம்பிக்கையை அளித்துள்ளது.

(பி, டி. ஐ.)

# பாரதத்துக்கு ஜப்பான் கடன்

டோக்கியோ, அக். 16

சில குறிப்பிட்ட திட்டங்களுக்காகப் பயன்படுத்துவதற்குஜப்பான் 1கோடியே 5லட்சம் யென்கடன் பாரதத்துக்கு அளிக்குமென இங்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

# பெல்ஜியத்தில் மாணவர் ஊர்வலம்

பிரசெல்ஸ், அக். 16

அமெரிக்க வியட்னும் கொள்கையை எதிர்த்தும் பெல்ஜியத்தில் வட அத்திலாந்திக் ஒப்பந்த தளங்கள் அமைப்பதை ஆட்சேபித்தும் பெல்ஜிய மாணவர்கள் மூவாயிரத்துக்கும் மேற்பட்டோர் இங்குமாபெரும் ஊர்வலமொன்றில் சென்றனர். அசம்பாவித சம்பவமெதுவும் நடைபெறவில்லை.

# செக். அதிபர் பாரத விஜயம்

பிராக், அக். 16

செக்கோஸ்லோவாக்கியா அதிபர் திரு. நவோட்னி அடுத்த மாதம் இந்தியாவுக்கு அரசாங்க விருந்தினராக விஜயம் செய்வார் என்று இங்குசெக்கோஸ்லோவாக்கியா செய்தித்தாபனம் அறிவித்துள்ளது.

# சவானுக்கு சத்திர சிகிச்சை

புதுடில்லி, அக். 16

இந்திய பாதுகாப்புமந்திரி திரு. சவானுக்கு நேற்று பம்பாய் ஆஸ்பத்திரியொன்றில் குடல்வால் அளர்ச்சிக்காகச் சத்திரசிகிச்சை செய்யப்பட்டது. அவர் தற்போது குணமடைந்து வருகிருர்.

# சர்க்கரை தட்டுப்பாடு

உடுப்பிட்டி, ஞாயிறு

உடுப்பிட்டி பலநோக்குக் கூட்டுறவுச்சங்கசமாஜத்தைச் சேர்ந்த சில சங்கக்கடைகளில் சென்ற மூன்றுமாதகாலமாகச் சர்க்கரைக்குப் பெரும் தட்டுப்பாடேற்பட்டுள்ளது. பொதுமக்கள் சர்க்கரை கேட்கும்போது இல்லையென்றே பதிலளிக்கின்றனராம். இதனுல் பொதுமக்கள் [illegible] த்து வாகிவருகிருர்கள்.

# ஐ. நா. பிரதிநிதிகளுக்கு பாதுகாப்பு அளிப்பேன்

## யுதாண்ட் வாக்குறுதி

நியூயோர்க், அக். 16

ஐ. நா. அங்கத்துவ நாடுகளின் பிரதிநிதிகளுக்கும், அவர்கள் நிலையங்களுக்கும் போதிய பாதுகாப்பு அளிக்க வசதி செய்யப்படுமென ஐ. நா. பொதுக்காரியதரிசி யுதாண்ட் இங்கு வாக்குறுதி அளித்துள்ளார்.

சில தினங்களுக்கு முன் சிரியா தூதுகோஷ்டியின் காரியாலயத்திற்குள் யூதர் ஆர்ப்பாட்டக்காரர் சிலர் பிரவேசித்து, அங்குள்ள பொருள்கள், தஸ்தாவேஜுகளைச் சேதப்படுத்தியதைத் தொடர்ந்து பிரதிநிதிகள் கோஷ்டியொன்று யுதாண்டைச் சந்தித்து இச்சம்பவம்பற்றிப் பிரஸ்தாபித்தனர். அப்பொழுது தான் யுதாண்ட் தமது வாக்குறுதியை அளித்தார்.

இச்சம்பவத்துக்காக ஏற்கெனவே அமெரிக்க தூதுவர் திரு. கோல்ட்பேர்க் சபையில் மன்னிப்புக் கேட்டிருந்தார். அவருடனும் இச்சம்பவம் பற்றிக் கலந்து ஆலோசித்து, தக்க பாதுகாப்பு நடவடிக்கைகள்மேற்கொள்ள முயற்சி செய்வதாக யுதாண்ட் தெரிவித்தார்.

# வியட்னுமில் மற்றுமோர் போர் ஆரம்பம்

## இயற்கை தொடுத்துள்ளது

சைகோன், ஒக். 16

தென் வியட்னுமின் அதன் மீகொங் ஆற்றுப்படலத்தில் வெள்ளம் பெருக்கெடுத்திருப்பதாகவும் வட வியட்னுமில்கடும்வரட்சிக்கான அபாயம்ஏற்பட்டிருப்பதாகவும் ஹானேய் வானொலிச் செய்திகளிலிருந்து தெரியவருகிறது.

இவ்விரு நாடுகளிலும் காலபோகத்தாலும், போரினுலும் நெற்பயிர் பாதிக்கப்பட்டுள்ளது.

சைகோனுக்குத் தெற்கேயுள்ள மீகொங், பஸாக் ஆறுகள்தமதுஉச்சவெள்ளக் கட்டத்தைச் சில தினங்களுக்கு முன் கடந்துவிட்டபோதும், நெற்பயிர் செய்யப்படும் பரந்த நிலப்பரப்புக்கள் இவ் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. சுமார் 70,000 பேர் தமது வீடுகளை இழந்துள்ளனர்.

வட வியட்னுமிலிருந்து வரும் செய்திகள், வரட்சி அங்கு எவ்வளவு தூரம் அபாயகரமானதாக வளரவில்லையாலுைம் எதிர்கால அறிவிப்புகள் கவலை தருவதாகவே இருப்பதாகத் தெரிவிக்கின்றன.

வரட்சிப் பிரச்னை ஓர் அவசரதேசியப் பிரச்னையென்றும், அதுவோர் முயற்சியைப்பாதிக்கலாமென்றும் ஹானேய் வானெலி அறிவித்துள்ளது.

''அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளை பொது மாகாணங்களிலிருந்து அடித்துத்துரத்தும் போராட்டத்தில் எமது வெற்றியைக்கணிக்க இவ் வரட்சிக்கெதிராக நாம் தொடுக்கும் போர் ஓர் அளவுகோலாகும்'' என வட வியட்னும் பத்திரிகை ஒன்று அறிவித்துள்ளது.

(பி. டி. ஸி)

# இரணதீவு மக்கள் எம். பி.யிடம் புகார்

கோண்டாவில், ஞாயிறு

பூநகரிக்கு விஜயம்செய்த கிளிநொச்சி எம். பியிடம் இரணதீவு கிராமசேவையாளர் திரு. வேலுப்பிள்ளை இரணதீவுக்கு போக்குவரத்துவசதிகள், தபால்சேவை சுகாதாரவசதிகள் ஆகியன சீராக இல்லாமையால் மக்கள் கஷ்டப்படவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளதென்றும் அவைகளை நிர்த்திசெய்ய ஆவன செய்து தரும்படியும் இரணதீவு மக்கள் சார்பாக ஒரு மகஜர் சமர்ப்பித்தார். கிளிநொச்சி எம். பி. நாம் வேண்டிய தேவைகளைப் பெற்றுத் தருவதற்கு ஆவன செய்வதாக உறுதியளித்தார்.

# ரஷ்ய-ஜெர்மன் பேச்சுவார்த்தைகள்

மாஸ்கோ, அக். 15

ரஷ்யாவுக்கு வந்துள்ள கிழக்கு ஜெர்மன் தலைவர் விலாடிஸ்லாவ் கொமுல்கா கிரம்ளின் தலைவர்களுடன் தொடர்ந்து பேச்சுவார்த்தைகள் நடத்தினர். பொருளாதாரப் பிரச்னைகளைவிட்டே முக்கியமாக விவாதம் நடைபெறுவதாக அறிவிக்கப் பட்டபோதும், சீனுவும் இருநாடுகளின் பேச்சுவார்த்தைகளில் இடம் பெற்றதாக அறியப்படுகிறது. (பி. டி. ஸி.)

# சிங்கப்பூருக்கு ஹுசைன் பாராட்டு

சிங்கப்பூர். ஒக் 16

மக்கள் வாழ்க்கை நலனைப் பெருக்குவதிலும், சமாதானத்தை வளர்ப்பதிலும் சிங்கப்பூரும், பாரதமும் ஒரே மாதிரியான நோக்கங் கொண்டிருப்பதாக இந்திய உபஜனுதிபதி டாக்டர் ஸக்கிர் ஹுசைன் இங்கு சிங்கப்பூர் அதிபருக்கு அளித்த விருந்துபசாரத்தில் தெரிவித்தார்.

பல இனங்கள், மதங்கள், மொழிகள் உள்ள நாடான சிங்கப்பூர் பாரதத்தைப் போலவே சகிப்புணர்ச்சியுடன் நடந்து கொள்வதை உப ஜனுதிபதி பாராட்டினர்.

சிங்கப்பூரின் சமூக பொருளாதாரத் திட்டங்களையும் உபஜனுதிபதி பெரிதும் பாராட்டினர்.

# ஸ்ருடியோவில் திருட்டு

உடுப்பிட்டி, ஞாயிறு

வல்வெட்டித்துறையில் உள்ள ஒரு ஸ்ருடியோவில் சென்ற சில தினங்களுக்கு முன்பு சுமார் 3,000 ரூபா பெறுமதியான புகைப்படக் கருவிகள் திருட்டுப்போய் விட்டதாக வல்வெட்டித்துறை பொலிஸ்நிலயத்தில் புகார் செய்யப்பட்டுள்ளது. நள்ளிரவில் இத்துணிகரத் திருட்டு நடைபெற்றதாகத் தெரியவருகிறது. இத்திருட்டைத் தொடர்ந்து வல்வை பொலிஸார் தீவிர புலன் விசாரணையை மேற்கொண்டுள்ளனர்.

# படம் காண்பிக்கப்பட்டது

சுழிபுரம், ஞாயிறு

சுழிபுரம் சுகாதாரப்பகுதி பரிசோதகரின் முயற்சியால் குடும்ப நலத்திட்ட படம் ஒன்று இலவசமாகக் காண்பிக்கப்பட்டது.

# கிழக்கு ஐரோப்பிய தலைவர்கள் மாஸ்கோவில் கூடுகின்றனர்

## புதிய விண்வெளிக் கப்பலை ரஷ்யா அனுப்பும்

மாஸ்கோ, அக்டோபர் 16

கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் பிரதிநிதிகள் மாஸ்கோவில் ஒரு மகாநாட்டில் கலந்துகொள்வர்என இங்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கெனவே மாஸ்கோ வந்துள்ள கிழக்கு ஜெர்மனித் தலைவர் கொமுல்கா, சோவியத் ரஷ்யாவுக்கு எதிராக சீன நடத்திவரும் துவேஷப் பிரசாரம் கொம்யூனிஸ்ட் உலகைப் பெரிதும் பிளவுபடுத்த உதவுவதாகக் கூறியுள்ளார்.

மாஸ்கோவில் நடைபெறும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் மகாநாட்டில் கலந்துகொள்ள செக்கோஸ்லேவேக்கியா, பல்கேரியா, ஹங்கேரி ஆகியவற்றின் பிரதிநிதிகள் வந்து கொண்டிருக்கிருர்கள்.

இத்தலைவர்கள் மாஸ்கோவில் கூடும்பொழுது. சோவியத் ரஷ்யா விண்வெளிக்கு மனிதனை அனுப்பும் வகையில் ஓர் விண்வெளிக் கப்பலை அனுப்புமென எதிர்பார்க்கப்படுகிறது.

# 1000 ருத்தல் தேயிலை

கொழும்பு, வெள்ளி

சமீபத்தில் நிலநடுக்கத்துக்குள்ளாகி கஷ்டங்கள் அனுபவித்த துருக்கியிலுள்ள மக்களுக்கு பயன்படும்வகையில் இலங்கை அரசாங்கம் 1000 ருத்தல் தேயிலையைக் [illegible] உதவி இருக்கின்றது.

# 'குட்வானுலாண்ட்' மாபெரும் கண்டம்

## ஆராய்ச்சியாளர் கண்டுபிடிப்பு

ஒன்டொன், ஒக். 16

அண்டாக்டிக்காவில் அண்மையில் செய்யப்பட்ட ஆராய்ச்சிகளின் பயனுகவும் கண்டுபிடிப்புகளின் மூலமாகவும் சம ரேகைக்குத் தெற்கேயுள்ள கண்டங்கள் முன்னெருகாலத்தில் 'குட்வானுலாண்ட்' என்ற மாபெரும் கண்டத்தின் பகுதிகளாக இருந்திருக்க வேண்டுமென இங்கு நடைபெறும் பொருட் காட்சியொன்றில் கருத்து வெளியிடப்பட்டுள்ளது. இம்மாபெருங்கண்டம் சுமார் 20 கோடி வருடங்களுக்கு முன் இருந்திருக்க வேண்டுமென ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர்.

(பி. டி. ஸி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

பிறர்க்கு நல்லதையே செய். அன்பு, தயை, வாய்மை, அஹிம்சை, மனத்தூய்மை ஆகியவற்றை வாழ்க்கையிற் கடைப்பிடி. இதுதான் மதம்.

— சுவாமி சிவானந்தசரஸ்வதி


# ஈழநாடு

EELANADU National Tamil Daily, Post Box [illegible] JAFFNA.
Telegrams: EELANADU Jaffna: Telephone [illegible]

யாழ்ப்பாணம் பராபவ ஆண்டு ஐப்பசி 1 உ (17-10-66)


## பிள்ளையார் பிடிக்க குரங்கான கதை

'பிள்ளையார் பிடிக்க குரங்கான கதை' என்று தமிழில் ஒரு பழமொழி உண்டு. இலங்கையில் அரசாங்கத் துறை மேற்கொண்ட பல முயற்சிகள் இந்தப் பழமொழிக்கு மிகமிகப் பொருத்தம். சீனி உற்பத்தி முயற்சி இதற்கு ஓர் உதாரணம். சீனி உற்பத்திசெய்து உள்நாட்டுத் தேவையைப் பூர்த்தி செய்யும் நோக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்ட சீனித் தொழிற்சாலைகள் சீனியைவிட சாராய உற்பத்திக்கே உதவிபுரிகின்றன.

கல்லோயாவிலும் கந்தளாயிலும் சீனி உற்பத்தி ஆலைகள் ஆரம்பிக்கப்பட்டன. இரண்டுக்கும் பதினைந்து கோடி ரூபாய் மூலதனச் செலவு. யந்திரங்கள் இறக்குமதி செய்யப்பட்டன; நிபுணர்கள் வரவழைக்கப்பட்டனர்; தொழில் நுட்பப் பயிற்சி அளிக்கப்பட்டது. சுமார் பத்துவருடகாலம் பெருமுயற்சி நடைபெற்றது. சீனி ஆலை தொடங்கப்படு முன்னரே, 'இத்தனை [illegible] டத்துக்குள் ஆலைக[illegible] வைப்பட்டு உற்[illegible]தி தொடங்கிவிடும். இன்னும் சில வருடங்களில் சீனி இங்கிருந்து ஏற்றுமதி கூடச் செய்யும் நிலைமை ஏற்படும்' என்று திட்ட அறிக்கைகள் பிரமாதமாக வெளிவந்தன. நிபுணர்களுக்கும், உத்தியோகத்தர்களுக்கும், அதிகாரிகளுக்கும் பத்துவருடகாலம் சம்பளம் கொடுத்து, சில சமயங்களில் பட்டாளமும் கரும்பு அறுவடை செய்து இதுவரை சீனித்தொழிற்சாலைகளினுல் கிடைத்த பயன் 'சுண்டைக்காய் கால்பணம், சுமை கூலி முக்கால்பணம்' என்ற நிலைதான். இலங்கையில் உற்பத்தியாகும் சீனி றாத்தல் ஒரு ரூபாய் பதினேழு சதம் முடிவடைகிறதாம். ஆனால் விற்கும் விலை இறாத்தல் பதினேழு சதம் தானும்.

சீனித்தொழிற்சாலைகள் மட்டும் தான் இலங்கையில் இவ்வித சாதனையை ஏற்படுத்தியுள்ள தென்பதல்ல. அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள் பல இதே சாதனைகளைத்தான் செய்து வருகின்றன. வருடாவருடம் நஷ்டத்தில் நடைபெறும் இக்கூட்டுத்தாபனங்கள் உயிர்வாழ்வதற்கு, அவை இறக்குமதி வியாபார ஏஜண்டுகளாகவும் செயலாற்றுகின்றன. உள்நாட்டில் உற்பத்தியை ஆரம்பித்து உள்நாட்டு மூலவளங்களைப் பயன்படுத்தி அந்நியச் செலாவணியை மிச்சப்படுத்தவும் உள்நாட்டு உற்பத்தியில் தன்னிறைவு பெறவும் ஆரம்பிக்கப்பட்ட கூட்டுத்தாபனங்கள், இந்த நோக்கத்தில் அடையும் தோல்வியைச் சமாளிப்பதற்கு, வெளிநாடுகளிலிருந்து உற்பத்திப் பொருட்களை இறக்குமதி செய்து இலாபம் வைத்து விற்பனைசெய்து பிழைக்கின்றன. சீனித் தொழிற்சாலைகளிரண்டும் சீனி உற்பத்தி செய்யத் தொடங்கியும் இப்போது நாட்டுக்குத் தேவையான சீனியில் 90 சதவீதம் வெளி நாடுகளிலிருந்தே இறக்குமதி செய்யப்படுகின்றது. நிலைமையைச் சமாளிக்க சீனி சுத்திகரிப்பு நிலையம் ஆரம்பிக்க சீனிக்கூட்டுத்தாபனம் திட்டமிட்டுள்ளதாம். இதர கூட்டுத்தாபனங்கள் காட்டிய வழிதான் இது. சீனி உற்பத்தி செய்வதற்குப் பதில் சாராய உற்பத்திக்கு உதவுவதன் மூலம் சீனி ஆலை உயிர்பிழைத்து வருகிறது.

நாட்டின் மூலப் பொருள்களை சரியான முறையில் மதிப்பிட்டு அவற்றைப் பயன்படுத்தி உள்நாட்டுத்தேவையைப் பூர்த்தி செய்யக்கூடிய முறையில் கைத்தொழில் அபிவிருத்தித் திட்டங்கள் உருவாக்கப்பட வேண்டும். ஆடம்பரமாக, வெளிநாடுகள் சிலவற்றைப்பார்த்து, அரசியல் நோக்கத்துடன் திட்டங்களை உருவாக்குவது எவ்வித நன்மையும்செய்யாது என்பது கடந்தகால அனுபவம். கைத்தொழில் அபிவிருத்தித் திட்டங்களைப் புதிதாக ஆரம்பிப்பதற்குமுன்னர், இதுவரை ஆரம்பிக்கப்பட்ட திட்டங்களைப் பற்றி ஆராய்ந்து அவற்றைப் புனரமைக்க வேண்டியது அவசியம்.

## கி. ச. சமாசத்தின் தீர்மானம்

கொழும்பு, ஞாயிறு

மேன்மாகாண கிராமசபை சமாச ஆண்டு பொதுக்கூட்டத்தில் பின்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

அரசினர் இலாகாக்களுக்கு வெளியூர் நன்கொடைகள் கிடைப்பதுபோல் கிராம சபைகளுக்கும் வெளியூர் நன்கொடைகள் கிடைக்க வேண்டுமென இச்சமாசம் அபிப்பிராயப்படுகிறது.

கிராமசபைப் பகுதிகளில் சேவைபுரியும் சுகாதார இலாகா உத்தியோகஸ்தர்கள் (சுகாதாரப் பரிசோதகர்கள், நர்ஸுகள், மருத்துவப் பெண்கள்) தங்கள் சேவைகளை ஒழுங்காகச் செய்வதில்லையென தெரிய வருகிறது. ஆதலால் இந்த உத்தியோகஸ்தர்கள் தாங்கள் அடுத்த மாதம் செய்ய உத்தேசித்திருக்கும் வேலை விபர இடாப்பு ஒன்று மாதந்தோறும் கிராமசபைகளுக்கு அனுப்புவதற்குச் சுகாதார இலாகா நடவடிக்கை எடுக்கவேண்டுமென இச்சமாசம் வேண்டிக்கொள்கின்றது.

## பஸ் தாமதம்

நெடுங்கேணி, ஞாயிறு

முல்லைத்தீவு இ. போ. ச. டிப்போவைச் சேர்ந்த பஸ் ஒன்று, கண்டக்டர் புதிய டிக்கட் புத்தகம் கொண்டுவராமையால் மாங்குளம் போகவேண்டிய பஸ் பல மணிநேரம் நெடுங்கேணியில் தாமதமாகி நிற்பாட்டப்பட்டதாகத் தெரிகிறது.

# உயிர்

துணையாகி நிற்பவள் சொல்லாகி
நிற்பாள்; சுடர் கொளுவி
அணையாது நிற்க அருள்கிற
தூயவள், அயன் மகிழும்
இணையாகி நிற்பவள்; ஏராள
மான இசை நயத்திற்
பிணைவாகி நிற்பவள் வாணி
எனப்படும் பேரினளே.

வாணி சரசுவதி என
மற்றைறயோர் வாழ்த்தெடுத்துப்
பேணி வணங்கும் பெருமாட்டி,
பேச்சவள்; வெட்புடையாள்,
ஆணிபுலமைக்கவளே
என ஆன்றோர் அஞ்சலிப்ப,
வீணை தரிப்பவள், வெள்ளைக்
கமலத்து மெல்லியலே.

மெல்லியல் வாய்ந்த கலைஞரின்
மாண்பினை—மேன்மையினை
எல்லவரும் போற்றி ஏத்த
ஒரு குறியாகி நிற்கும்
நல்லவள், நாயகி, நாடு
பணிந்திடும் நங்கை—சிறூர்
கல்வி தருக என வேண்டு
கின்ற கலைமகளே!

கலைமகள்—காவிய மூலி
கலிக்கும் கருத்துகளின்
நிலை அவள்; நித்தமும் வேர்த்துழைப்
போர்தம் நினைப்புகளின்
வலி அவள்; வாழ்வில் அநீதியைக்
கொன்று மடிக்க எழும்
புலிகளின் உள் நின்று போதம்
புகட்டும் பொருள் அவளே.

பொருளாளி யாக அனைவோரும்
மேவும் பொதுமை அற—
அருளாவல் கொண்டவள்; அத்திசை
நோக்கிட ஆணையிட்டே
உருளாத முன்னேற்றத் தேரை
உருட்டும் உயிர்—கொடிய
இருளேகு மாறு தளரா
துழைற்றும் எழுத்தவளே.

—முருகையன்

# பாரதியின் கனவு நனவாகின்றது

### பாரதி விழாவில் பேச்சு

பண்டத்தரிப்பு, ஞாயிறு

''பலமொழிகளையும் கற்ற பாரதி அவற்றுள் ஒன்றாக தமிழ்மொழியையும்கற்ருர். தேமதுரத்தமிழோசை உலகெங்கும் பரவும் வழி செய்ய வேண்டும் என்று பாரதி கண்டகனவு நனவாகிறது. உலகெங்குமே பரந்திருக்கும் தமிழர் தமிழன்னைக்கு விழாவெடுக்கின்றனர். உலகத்தமிழாராய்ச்சிமகாநாடுகள் நடைபெறுகின்றன. பி பி சி வானொலிநிலையம்கூட தமிழ நிகழ்ச்சிகளை நடத்துகிறது. உண்மையில் பாரதியின் கனவு நனவாகிறது.''

இவ்வாறு இளவாலைசென் ஹென்றிஸ் கல்லூரி தமிழ் மாணவர்சங்கசார்பில்நடைபெற்ற பாரதி விழாவில் சைவப்புலவர் திரு. செல்லையா கூறினுர். பண்டிதர் இராசநாயகம் பேசுகையில் எளியதமிழ் நடையில் எவருமே புரிந்து கொள்ளக் கூடிய வகையில் பாரதி கவிதைகளை ஆக்கியிருப்பது கவித்திறனை மட்டுமல்ல ஏனையோரும் அதனைப்படித்து இன்புற வேண்டுமென்ற நோக்கமே என்றுகுறிப்பிட்டார்.

'பாரதியின் இலக்கியப் படைப்பு' என்னும்விடயம் பற்றி திரு. வே. கந்தசாமி பேசினுர்.

## பரிசுப் பணத்தில் லண்டன் சுற்றுலா

கொழும்பு, ஞாயிறு

டிசெம்பர் 28ம் திகதியன்று இழுக்கப்படும்தேசிய ஆஸ்பத்திரிசுவீப்பில்முதலாவது பரிசுபெறுபவர் பரிசுப் பணத்தில் ஒரு பகுதியைப் பெறுவதுடன், லண்டன் அல்லது ஜப்பானுக்குப் பிரயாணம் செய்துதிரும்ப சந்தர்ப்பம் அளிக்கப்படுவாரெனத்தெரிகிறது.

## வெற்றிலை

பண்டத்தரிப்பு, ஞாயிறு

இளவாலை, கடுகம்பளை, சில்லாலை, சித்திர மேழி போன்ற வெற்றிலை செழித்து வளரும் இடங்களில் வெற்றிலைக் கொழுந்து பயிரிடுவதற்காக நிலங்கள் பண்படுத்தப் பட்டு வருகின்றன.

## பாடசாலை பஸ்சேவை

பண்டத்தரிப்பு, ஞாயிறு

இம்மாதம் முதலாந்தேதியிலிருந்து இளவாலைக்கு காலையிலும் மாலையிலும் பாடசாலை பஸ் சேவை ஒன்று ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. பண்டத்தரிப்பு, சில்லாலை, மாதகல் ஆகிய பகுதிகளிலிருந்து வரும் பிள்ளைகள் இதனால் நன்மை அடைகின்றனர்.


அறிஞர்
கி. வா. ஜகந்நாதன்
எழுதும்
"எல்லாம் சக்தி மயம்"
என்ற விசேஷ கட்டுரை
நாளை 'ஈழநாடு'
பத்திரிகையில்
வெளிவரும்


## நாட்டிலும் நகரிலும்

நேற்று முன்தினம் புரட்டாதிக்கடைசிச்சனிக்கிழமை. சனீஸ்வரர்க்கு ஒவ்வொரு சனிக்கிழமையும் விரதம் அனுஷ்டித்தவர்களும், சனி விரதம் அனுஷ்டிக்காதவர்களும், அன்று கடைசிச் சனிக்கிழமையையொட்டி கோவில்களுக்குச் சென்று சனிதோஷம் நீங்குவதற்கு எள்ளெண்ணெய் எரித்து வழிபட்டார்கள். சிவன் கோவில், பிள்ளையார் கோயில், அம்மன்கோவில், என்ற வேறுபாடில்லாமல் எல்லாக் கோயில்களிலும் எள்ளெண்ணெய் எரித்து சனி வழிபாடு செய்வது ஒரு பழைய வழக்கமாயிருந்துவருகிறது.

அன்று மாலை வண்ணை சிவன்கோயில் பக்கமாகச் சென்றபோது அங்கும் ஆயிரக்கணக்கான பக்தர்களும், முக்கியமாக புரட்டாதி சனி விரதம் முடிப்பவர்களும், எள்ளெண்ணெய் எரித்து சனீஸ்வரனுக்கு அர்ச்சனை செய்யும் வழிபடுவதைக் கண்டேன். நானும் ஒருமூட்டியில் எள்ளும் எண்ணெயும் முப்பது சதம் கொடுத்து வாங்கி நவக்கிரக ஸன்னிதானத்தின் முன் வைத்து எரித்து. 'அப்பனே, சனீஸ்வரா! என்னை மட்டுமல்ல, இந்த உலகத்தையே உனது பிடியிலிருந்து விடுவி' என்று வணங்கி அர்ச்சனையும் செய்தேன்.

சனீஸ்வரனுக்கு ஏன் எள்ளும் எண்ணெயும் எரிக்க வேண்டும் என்று மனதில் ஒருயோசனை தோன்றியது. இதுபற்றி அருகில் நின்ற கோயில் அர்ச்சகர் ஒருவரிடம் விசாரித்தபொழுது அவர் விளக்கம் தந்தார். நவக்கிரகங்கள் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு நவதானியத்தில் பிரீதி உண்டாம். சூரியனுக்கு கோதுமை, சந்திரனுக்கு அரிசி, ராகுவுக்கு உழுந்து, கேதுவுக்கு கொள்ளு, வியாழனுக்கு கடலை — இப்படியே சனிக்கு பிரீதியானது எள்ளும் எள்ளோடு சம்பந்தப்பட்ட எண்ணெய் முதலியனவுமாம். இதற்காகத்தான் புரட்டாதிச் சனிக்கிழமைகளில் சனி பகவானுக்கு எள்ளெண்ணெய் எரித்து அவருடைய தயவைப் பெற்றுக் கொள்ளும் வழக்கம் ஏற்பட்டதாம்.

தலைக்கு நல்லெண்ணெய் தேய்த்து சனி நீராடுவதும் இதனுல்தான்போலும்.

சஹஸ்ரநாமஅர்ச்சனையில் 'தில தீபப்பிரியாயி நமஹ!' என்றும் வருகிறதாம். 'தில' என்பது வடமொழியில் எள்ளு, சிங்கள மொழியில் இதுவே திரிந்து 'தல' என்று எள்ளைக் குறிக்கிறது போலும். தலத்தெல—நல்லெண்ணெய், தலபோலை—எள்ளுருண்டை.

எள்ளெண்ணெய் எரிந்து முடியுமட்டும் அதைப்பார்த்தவண்ணம் நின்றபோது நவக்கிரகங்கள் உண்மையில் நமது வாழ்க்கையைத் தாக்குகின்றனவா. அப்படியானுல் தெய்வங்கள் இருந்து என்ன பயன், நமது சீவியத்தைப் பாதிக்கும் அளவுக்கு கிரகங்களிடம் சக்தி இருந்தால் அவை தெய்வங்களுக்கும் மேலானவையா, அல்லது தெய்வங்களின்கட்டளைகளை கிரகங்கள் நிறைவேற்றுகின்றனவா என்று நூற்றுக்கணக்கான கேள்விகள் மூளையைப்போட்டுபிய்த்து வாட்டின.

தெய்வ நம்பிக்கையுள்ளவர்களும் சோதிடர்களும் சோதிடத்தில் நம்பிக்கையுள்ளவர்களும் ஒருபுறம். தெய்வ நம்பிக்கையில்லாத நாத்திகர்களும் விஞ்ஞானிகளும் ஆபிரகாம் கோவூர் போன்றவர்களும் ஒருபுறம். இவர்களில் எந்தக்கட்சி சரி.

(5-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவசாயிகளுக்கிடையில் உற்பத்தி போட்டி

## கமத்தொழில் பகுதியினர் நடத்துவர்

கோண்டாவில், ஞாயிறு

கோண்டாவில் விவசாயிகளுக்கிடையில் நெற்செய்கைப்போட்டி யொன்றை கமத்தொழிற் பகுதியாளர் நடத்தவிருக்கின்றனர்.

பெரும்போக நெற்செய்கையிற்சிறப்பான உற்பத்தி செய்த விவசாயிகள் இந்தப் பரிசுகளைப் பெறுவர். விவசாயத்துறையில் விவசாயிகளுக்கு ஊக்கமளிக்குமுகமாகவே இந்தப் போட்டிகள் நடத்தப்படவிருக்கின்றன. ஒவ்வொரு காரியாதிகாரி பிரிவிலும் பணப்பரிசில்கள் 3 வழங்கப்படும். முதலாவது, இரண்டாவது, மூன்றுவது பரிசுகளைப் பெறுவோருக்கு முறையே 750 ரூபா 300 ரூபா 100 ரூபா வழங்கப்படும். முதல் மூன்று இடங்களில் ஒன்றைப் பெறத் தவறிய சிறந்த செய்கையாளருக்குத் திறமைப்பத்திரங்கள் வழங்கப்படும்.

அரசாங்க அதிபரால் நியமனமாகிய மத்தியஸ்தர் குழுவொன்று மதிப்பீடுசெய்யும்.

# அரசியல் மேடைக்கு சைவத்தை இழுக்காதீர்

## அரசியல் வாதிகளுக்கு கோரிக்கை

மாவிட்டபுரம், ஞாயிறு

ஏனைய சமயங்களுக்கு விரோதமாக ஏதாவது கூறினால் மதகுருமாரும், பீடாதிபதிகளும் பொங்கி எழுவார்கள். ஆனால் சைவசமயத்தைப் பொறுத்தவரை எல்லோரும் விளக்கம்கொடுக்கத் தலைப்பட்டுவிட்டார்கள்'' என்று மாவிட்டபுரம் ஸ்ரீகந்தசாமிகோவில் பிரதமகுரு பிரம்மஸ்ரீ சு. து. ஷண்முகநாதக் குருக்கள் கந்தசுவாமிகோவிலில் நடந்த மகாநாட்டிற் பேசும்போது குறிப்பிட்டார்.

அகில இலங்கைச் சைவ இளைஞர் சைவமகாசபைக் கூட்டம் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் வசந்த மண்டபத்தில் நடைபெற்றது. இந்துசமய விருத்திச் சங்கம், சைவமகாசபைமுதலான சங்கங்களின் பிரதிநிதிகள் இக்கூட்டத்திற் கலந்துகொண்டு சைவசமயப் பாதுகாப்பு நடவடிக்கைகளை ஆராய்ந்தனர்.

இந்த மகாநாட்டுக்குத் தலைமை வகித்துப் பேசியபோது பிரம்மஸ்ரீ சு. து. ஷண்முகநாதக் குருக்கள் மேலும் கூறியதாவது: தீண்டாமை ஒழியவேண்டும், ஆலயப் பிரவேசம் நடைபெறவேண்டும் என்று முயற்சிப்பவர்களும்தலைமை தாங்குபவர்களும் ஏதோ ஒரு தமது நோக்கினை நிறைவேற்றவே இதனைப் பயன்படுத்துகிறார்கள். சமய நம்பிக்கை அற்றவர்கள் புறச்சமயத்தவர்கள்தான் இத்தகைய கோரிக்கைக்கு செவிசாய்ப்பர். உண்மைச் சைவன் இதில் ஈடுபடமாட்டான்.

தொண்டன் வே. அருளம்பலம் பேசியதாவது: தீண்டாமை ஒழிப்பு என்ருல் ஆசார ஒழிப்பு என்பதே. சமயத்துக்கு விரோதமான கருத்துக்கள் வெளிவரும்போதும் அவற்றை மாவை ஆதீன கர்த்தா கண்டிக்க வேண்டியது அவசியம்.

இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:

மறுசமயங்களைப் போல சைவசமயமும் அரசியல் வாதிகளால் மேடைகளிற் பேச்சுக்கு இழுபடக்கூடாது என்று இச்சபை அரசியல் வாதிகளைக் கேட்டுக்கொள்ளுகிறது. சைவசமயத்துக்கு எதிரான சட்டம்கொண்டு வரும் கட்சிகளை சைவமக்கள் பகிரங்கமாக எதிர்க்க வேண்டும்.

ஆலயப் பிரவேசத்தை விரும்புவோர் அல்லது ஆதரிப்போர் பொதுமேடையில் இச்சபை நியமிக்கும் அறிஞர்களுடன் அதுபற்றி விவாதிக்க முன்வந்தால் தகுந்த ஏற்பாடுகள் செய்து விவாதம் நடைபெறச்செய்தல் வேண்டும். வேறுதீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

# உணவுப் பொருட்கள் கிடைக்க ஏற்பாடு செய்க

## அரசாங்க அதிபருக்குமக்கள்மன்றம் கோரிக்கை

மாவிட்டபுரம், ஞாயிறு

தட்டுப்பாடாக உள்ள கொத்தமல்லி, மிளகாய், பால்உணவு ஆகிய பொருட்கள் கிடைக்கக் கூடியதாக அரசாங்க அதிபர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று யாழ். மாவட்ட மக்கள்மன்றம் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

திரு. வேர்ணன் அபயசேகரா தலைமையில் நடந்துகொண்ட இக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு தற்போது வழங்கப்பட்டுவரும் சீமெந்தின் தொகையை இரட்டிப்பாக்கவேண்டும்.

நவராத்திரி, கந்தஷஷ்டி, பெருங்கதை முதலான விரதநாட்களில்போதியசர்க்கரை கிடைக்காது மக்கள்பெரும் கஷ்டத்துக்கு உள்ளாகிறார்கள். போதிய சர்க்கரை தட்டுப்பாடு இல்லாது கிடைக்க வேண்டும்.

தோட்டச்செய்கைக்கான சோழியன் மண் வெட்டிகள் விவசாயிகளுக்குக்கிடைக்கச் செய்யவேண்டும்.

லொறிடயர்களும் டிராக்டர் டயர்களும் இப்போது கிடைப்பது அரிதாக இருப்பதனால்வடக்கன் மாடுகளை இறக்குமதி செய்யவேண்டும்.

நெசவு நிலையங்களில் பயிற்சி பெற்றுதங்கள்வீடுகளில் தொழில் செய்யும் நெசவுத் தொழிலாளருக்கு தரமுள்ள நூல்கள் கிடைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அரசாங்க அதிபர் இந்த விஷயங்களைதலைமைப் பீடத்தின் கவனத்துக்கு கொண்டுவந்து தகுந்த நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தார்.

### ஆலோசனைக் கூட்டம்

கோண்டாவில், ஞாயிறு

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இலவச நெல் வழங்குவது பற்றி இன்று பூநகரிக் காரியாதிகாரி கந்தோரில் ஓர் ஆலோசனைக் கூட்டம் நடைபெறும்.

இக்கூட்டத்தில் பயிர்ச் செய்கைக்குழுக்கள், கிராம [illegible] விவசாயி [illegible] கலந்து கொள்வர்.

## தபால் இலாகாவின் சாதனை

சங்கானை, சனி

கடந்த வருடம் 17-9-65ல் சங்கானை பட்டின சபையினரால் உத்தியோக பூர்வமான கடிதமொன்று யாழ்ப்பாணம் கஸ்தூரியார் றோட்டிலுள்ள பாலசிங்கம் என்பவருக்கு விலாசமிடப்பட்டு அனுப்பப்பட்டது. இக்கடிதம் ஒரு வருட காலத்திற்கு மேலாக எங்கோ உறங்கிவிட்டுத் திடீரெனக் கண்விழித்தெழுந்து தன்னை உருவாக்கி அனுப்பி வைத்த சங்கானைப் பட்டினசபைக் காரியாலயத்தை நோக்கி ஆமை வேகத்தில் இம்மாதம் 7-ந் திகதி பத்திரமாக வந்து சேர்ந்துள்ளது.

சங்கானையிலிருந்து 8-மைல்களுக்குள் இருக்கும் யாழ்ப்பாணத்திற்கு போய்வர எடுத்த காலத்தைக் கணக்கிட்டால் தபால் இலாகா நிலைநாட்டிய சாதனைகளில் இதுவே முதல் இடத்தைப் பெறுமென்று சொல்லலாம்.

## கோட்டா தரும்படி கோரிக்கை

மாவிட்டபுரம், ஞாயிறு

உணவுப் பொருட்களை இறக்குமதி செய்ய கோட்டா தரும்படி வடபகுதி உணவு தானிய மொத்த இறக்குமதி வர்த்தகர் சங்கம் உணவுக் கட்டுப்பாட்டதிகாரிக்கு விண்ணப்பித்துள்ளது.

யாழ்ப்பாணம் உணவுக் கட்டுப் பாட்டதிகாரிக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் கூ. மொ. விற்பனை நிலையங்களில் மிளகாய், மல்லி முதலான பொருட்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகவும் இதனைப்போக்க நடவடிக்கை எடுக்கும்படியும் கேட்டுள்ளது.

1966-ம் ஆண்டு ஜனவரியில்தயாரிக்கப்பட்டபட்டியலில் இருந்த வர்த்தகர்களின் பெயர்களிற் பல ஏப்ரலில் தயாரிக்கப் பட்ட பட்டியலில் இடம்பெறாது நீக்கப்பட்டதற்கும் இச்சங்கம் தனது ஆட்சேபனையைத் தெரிவித்துள்ளது.

## அங்குரார்ப்பணம்

கோண்டாவில், ஞாயிறு

பூநகரிப் பயிர்ச்செய்கைக் குழுச்சமாஜம் பூநகரி கிராம சபைக்காரியாலயத்தில் அங்குரார்ப்பணம் செய்யப் பட்டது. சமாஜத்தின் நிர்வாக உத்தியோகஸ்தர்களாகப் பின் வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் திரு. வை. வல்லிபுரம், காரியதரிசி திரு. சி. சதாசிவம், தனாதிகாரி வே. கார்த்திகேசு.

## இணுவில் அம்பலவாணர் கோவில் சங்காபிஷேகம்

இணுவில், திங்கள்

இணுவில் அம்பலவாண கந்தசுவாமிகோவிலிற் புதன்கிழமை 19ம் திகதி காலை 8 மணியளவில் சங்காபிஷேகமும், சண்முகார்ச்சனையும், இரவு சண்முகப்பெருமானின் மணவாளக் கோலமும் ''பூந்தண்டிகையில்'' மின்சார தீபாலங்காரத்துடன் பெருமான் வீதிவலம் வருதலும் நடைபெறும்.

## வருடாந்தக் கூட்டம்

யாழ்ப்பாணம், திங்கள்

வடமாகாண உணவு உற்பத்தி மேற்பார்வையாளர் சங்கத்தின் 11 வது வருடாந்தப் பொதுக்கூட்டம் இம்மாதம் 20-ம் திகதி மு. ப. 9 மணிக்கு தலைவர் மு. கணபதிப்பிள்ளை தலைமையில் வவுனியா பப்ளிக் சேர்விஸ் கிளப்பில் நடைபெறவிருக்கிறது.

மேற்படி வைபவத்தில் டாக்டர் இ. அமரரத்தின திரு. எஸ். கனகரத்தினம் ஆகியோர் கலந்துகொள்ளவிருக்கிறார்கள்.

## நாட்டிலும் நகரிலும்

(4-ம்பக்கத் தொடர்ச்சி)

எது பிழை?

பன்னிரண்டு வருடங்களுக்குப்பிறகு அவன் தான் பிறந்த வீட்டுக்குச் சென்றுகொண்டிருந்தான். சிறைச்சாலையில்அவனுக்குக் கொடுக்கப்பட்ட சிறு பணத்திலிருந்து தாய்க்கு விருப்பமான சில சாமான்களை வாங்கிக்கொண்டு பாணந்துறைக்குப் பஸ்ஸில் போய்க்கொண்டிருக்கிறான். மொறட்டுவை வந்துவிட்டது. இன்னும் 7 மைல்தான் வீடுபோய்ச் சேர்வதற்கு. கண்டக்டர் வந்து பார்த்தார். ஆள் செத்துப்போய்க் கிடக்கிறான்!

மனைவியையும் குழந்தையையும் கொலைசெய்த குற்றத்திற்கு 12 வருடங்கள் 'ஆயுள் தண்டனை' அனுபவித்த டியூடர் பீரிஸ் வெலிக்கடைச் சிறைச்சாலையிலிருந்து வீடு திரும்பும்போது இச்சம்பவம் நடந்தது. இத்தனை வருடங்களுக்குப் பின் வீடு திரும்புகிறவன்தன் தாயின் முகத்தில் விழித்திருக்கப்படாதா? அதற்கிடையில் குறுக்கிட்டது யார்? தெய்வமா, விதியா, மாரக கிரகமா? அவன் சிறைச்சாலையிற் செத்திருக்கப்படாதா? அல்லது வீடு திரும்பி உற்றார் உறவினருடன் சிலகாலம் இருந்தபின் இறந்திருக்கப்படாதா? ஏன் இந்தப் பரிதாப மரணம்? இதற்கு காரணம் யார்?

டக்டரைக் கேட்டால் 'மாரடைப்பு' என்பார்!.

--வழிப்போக்கன்

## நாட்டைப்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கிடைத்த வெற்றி'' என்று அமைச்சர் கூறினர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியினர் தமது பத்து வருட ஆட்சிக்காலத்தில் வகுப்புத் துவேஷத்தையும் பாகுபாட்டையுமே வளர்த்தார்களென்றும் தேசிய அரசாங்கம் தேசிய ஐக்கியத்தை நிலைநாட்டியுள்ளதென்றும் அமைச்சர் திருச்செல்வம் கூறினர்.

### மாவட்டசபைகள்

பதுளையில் ஒரு கூட்டத்தில் அமைச்சர் திருச்செல்வம் பேசுகையில், முன்னைய அரசாங்கம் கொண்டுவருவதாக உறுதியளித்திருந்த மாவட்டசபை மசோதாவிரைவில் கொண்டுவரப்படுமென்றும் மாவட்ட சபைகள் அமைக்கப்பட்டதும் பல பிரச்னைகள் நீங்கிவிடுமென்றும் கூறினர்.

அமைச்சர் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதி அல்லவென்றும் எனவே மாவட்டசபைகள் பற்றி அவர் இங்கு கூறுவது சரியல்லவென்றும் பின் பேசிய எட்டம்பிட்டி கிராமசபைத் தலைவர் திரு. வை. ஜி. ஜயசிங்கா கூறினர்.

இதற்கு அமைச்சர் பதிலளித்துப்பேசுகையில், தேசிய அரசாங்கத்தின் அமைச்சர் என்ற முறையில் தாம் அரசாங்கத்துக்குக் கட்டுப்பட்டவரேயொழிய தனிப்பட்டவருக்கும் கட்டுப்பட்டவரல்ல என்றார்.

## பால்மா கிடைக்கவில்லை

உடுவில், ஞாயிறு

நீண்டகாலமாக இப்பகுதிகளில் பால்மாப்பொருட்கள் கிடைக்காததினல் குழந்தைகளுக்குமாப்பாலூட்டும் தாய்மார்கள் பெரிதும் கஷ்டப்படுகிறார்கள். சிலவாரங்களுக்குமுன்னர் கொழும்புத் துறைமுகத்தில் பால்மாப் பொருட்களுடன் கப்பல்கள் வந்திருப்பதாகவும், விரைவில் இப்பொருட்களுக்கான தட்டுப்பாடுகள் நீங்கிவிடும் எனவும் பத்திரிகைகளிற் செய்திகள் வெளிவந்தன. ஆனால் இதுவரை இங்குள்ள கடைகளுக்கு பால்மாக்கள் கிடைத்ததாகத் தெரியவில்லை. தட்டுப்பாடும் நீங்கிய பாடும்இல்லை. தனியார் கடைகளிலோ, கூட்டுறவு சமாசங்களிலோ, கூட்டுறவுச் சமாஜங்களிலோ, பண்டகசாலைகளிலோஇப்பொருட்களை வாங்கச் செல்லும் பொதுமக்களுக்கு ''பால்மாவகை எதுவுமே இல்லை'' என்றபதில் கிடைக்கிறது.

### யாழ். மத்திய

## விடுதிமாணவர் தினம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்.மத்திய கல்லூரியின் விடுதி மாணவர்கள் சமீபத்தில் தமது வருடாந்த விடுதி மாணவர் தினத்தைக் கொண்டாடினர். யாழ்.மாநகரசபைக் கமிஷனர் திரு. கச்சன் செல்வராசா இவ் வைபவத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். மாணவர்கள் யாழ். பூங்காவின் ரேடியோ இரவு நேரங்[illegible] தங்கள் படிப்பைக் [illegible]வதாகவும் அதற்கு நட[illegible]கை எடுக்க வேண்டும்மென்றும் கேட்டுக் கொண்[illegible]னர். இக் கொண்டாட்டத்தையொட்டிமாணவர்கள் விளையாட்டுப்போட்டிகளும் நடத்தினர்.

## கடையில் திருட்டு

பலாலி, சனி

பலாலி பசாரிலுள்ள சண்முகம் கனகசபை என்பவரது கடையுள் நேற்றிரவு சில திருடர்கள் புகுந்து அங்கிருந்த பணத்தைத்திருடிக்கொண்டுசென்றதாக அறியப்படுகிறது. திருடர்கள் கூரைவழியாக உள்ளிறங்கியதாகவும் பின் முன் புறவாசலால் வெளியே சென்றதாகவும் சந்தேகிக்கப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக காங்கேசன்துறைப் பொலிசார் விசாரணை நடத்திவருகின்றனர். கொழும்பிலிருந்து கைவிரல் அடையாள நிபுணர் அழைக்கப்பட்டுள்ளார்.

## ...ந்தம்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தேசிய அரசாங்கம் செய்த தென்னவெனில், தமிழ் மொழி விசேஷ அதிகாரங்கள் மசோதாவின்கீழ் சில சட்டங்களை இயற்றியதே.

எஸ். எல். எப். பி. அதிகாரத்தில் இருந்தபோது, ஒரு மந்திரியாவது வடக்கு அல்லது கிழக்குக்குப் போக முடியவில்லை. இப்பொழுது அம்பாகாமங்களுக்கு ஏன் சிங்கள ஆசிரியர்களை அனுப்பவில்லையென்று இவர்கள் கேட்கிறார்கள்.''

கல்வி மந்திரி திரு. இரியகொல்ல பேசுகையில் ''இந்நாட்டில் வாழும் சிங்கள, தமிழ், முஸ்லிம், பறங்கிய மக்களிடையேஒற்றுமையை நிலைநாட்டுவதே தேசிய அரசாங்கத்தின் முக்கிய நோக்கமாகும்'' என்ருர்.

உள்நாட்டு விவகாரமந்திரி டாக்டர் டபிள்யு தஹநாயக்கா, உதவி ராஜாங்க மந்திரி திரு. டி. பி. அத்தப்பத்து, சுகாதார மந்திரி திரு. எம். டி. எச். ஜயவர்த்தன மற்றும் பலர் இக்கூட்டத்தில் பங்குபற்றிப் பேசினர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டு விவகாரங்களில் நாமும் அதிக பங்கு பற்றுவோம்

## மக்களிடையே அரசியல் விழிப்புணர்ச்சி அவசியம்

— 'மயிலன்' —

நாம் வாழுவது ஜனநாயக நாடு. ஜனநாயகம் என்றால் மக்களுக்காக, மக்கள் பிரதிநிதிகள் நடாத்தும் மக்கள் அரசாங்கம் என்பதே அர்த்தம். ஆகவே இறுதியில் ஒரு ஜனநாயக நாட்டில் மக்களுடைய குரலுக்கே ஆகக்கூடிய பலமும், மதிப்பும் இருக்க வேண்டும். இதன் உண்மையை நாம் ஆராயுமிடத்து, மக்கள் கூரிய அரசியல் அறிவு படைத்தவர்களாக இருக்குமிடத்தில் தான் ஜனநாயகம் சரியான முறையில் இயங்க முடியுமென்ற முடிவுக்கே வருவோம்.

இலங்கையில் உள்ள மக்கள் கடந்த பொதுத் தேர்தல்களில் இவ்வித அறிவு படைத்தவர்களாக நடந்து கொண்டார்களா அல்லவா என்பதை நாம் எமது கவனத்துக்கு எடுத்துப் பார்ப்போம்.

நாம் சுதந்திரம் பெற்ற பின் நடைபெற்ற முதல் இரண்டு தேர்தல்களிலும் மக்கள் நாட்டின் தேவைகளை மனதில் வைத்தே வாக்களித்தனர்.

ஆனால் துரதிஷ்டவசமாக 1956க்குப் பின் நடைபெற்ற தேர்தல்களில் இலங்கை மக்கள் இன, மத வாகுபாடுகளுக்கே அதிக முக்கியத்துவம் அளித்து வாக்களித்துள்ளார்கள் என்பது வரலாற்று உண்மை.

### சக்தியை உணருகிறீர்களா?

ஜனநாயக அமைப்பில் மக்கள் தான் அரசாங்கத்தை ஆக்கவும் அழிக்கவும் சக்தி பெற்றவர்கள் என்பது ஜனநாயக வாதிகளின் முடிவாகும். ஆனால், உண்மையிலேயே மக்கள் தமக்கு முன்னேயுள்ள பிரச்சினைகளை ஆற அமர ஆலோசித்து, அலசி ஆராய்ந்து, ஒரு முடிவுக்கு வருகிறார்களா என்பதே இங்கே நாம் கேட்க வேண்டிய கேள்வியாகும்.

அப்படிப்பார்க்குமிடத்து, பெரும்பாலும் மக்கள் தமது தலைவிதியை அரசியல் வாதிகளின் கைகளிலேயே கண்மூடித்தனமாக ஒப்படைத்து வருவதையே எமது நாட்டில் கடந்த சில வருடங்களாக நாம் கண்கூடாகக் கண்டு வந்துள்ளோம்.

'நாடும் நாமும்' பகுதியை வரவேற்றுப் பல வாசகர்கள் எமக்குக் கடிதங்கள் எழுதி வருகிறார்கள். அவர்களுக்கு எமது நன்றி.

பொருளாதாரம், விஞ்ஞானம், கல்வி, மதம் சம்பந்தப்பட்ட சிறிவான கட்டுரைகளை 'நாடும் நாமும்' பகுதிக்கு எழுதி அனுப்புமாறு வாசகர்களைக் கேட்டுக்கொள்கிறோம்,

கிராமமுன்னேற்றச்சங்கங்கள், கிராமஅபிவிருத்திச் சங்கங்கள், இளைஞர்மன்றங்கள் தத்தமது நடவடிக்கைகள் பற்றி எமக்கு எழுதி அனுப்பலாம். ஆனால் அவை உத்தியோகபூர்வமான ஆதாரத்துடன் அனுப்பிவைக்கப்படவேண்டும்.

சிலர் கட்டுரைகளின் தாளின் இருபக்கங்களிலும் எழுதி அனுப்புகிறார்கள். இத்தகைய கட்டுரைகள் கண்டிப்பாகப் பிரசுரிக்கப்படமாட்டா. தயவு செய்து தெளிவான மையில் தாளின் ஒரு பக்கத்தில் மட்டும் எழுதி அனுப்புங்கள்,

'வளவளா' என்று கட்டுரைகளை நீட்டாமல் சுருக்கரீதியாக, எடுத்த பொருளை இடித்துரைக்கும் வகையில் எழுதி அனுப்புங்கள்.

### உணர்ச்சிக்கு முதலிடம்

இவர்கள் இப்படி வாக்களித்ததுக்குக் காரணம் அறிவை உணர்ச்சிக்கு அடிமையாக்கியதேயாகும். எந்தப் பிரச்சினையையும் தீர்க்கதரிசனத்தோடு, நீண்ட காலக் கண்ணோட்டத்தில் அணுகுவதே ஒரு வாக்காளனின் கடமையாகும். ஆனால், கடந்த சில வருடங்களாக அரசியல் வாதிகளின் இன வேற்றுமைப் பிரச்சாரத்துக்கு மக்கள் செவிசாய்த்ததன் விளைவாக, நாடு பல சமூக, பொருளாதாரக் கஷ்டங்களுக்குள்ளாக வேண்டிய நிலை ஏற்பட்டது.

இந்தக் கட்டத்தில் தான் ஜனநாயகம் தனது சக்தியை இழந்து விடுகிறது. மக்கள் வெறும் உணர்ச்சிகளுக்கு அடிமையாகையில், அறிவு மழுங்கி விடுகையில், ஜனநாயகத்துக்குப் பேராபத்து ஏற்பட்டு விடுகிறது. அரசியல் வாதிகளும் மக்களின் உணர்ச்சிகளைத் தமது நலனுக்காகப் பயன்படுத்தி வருகிறார்கள். மக்கள் அரசியல் வாதிகளின் கைப்பொம்மைகள் ஆகிவிடுகிறார்கள் என்று கூறினால் மிகையாகாது.

இந்த ஆபத்தான நிலையை நாம் மாற்றியமைக்க வேண்டும். எம்மையும எமது பிற்கால சந்ததியினரின் வாழ்வையும் பாதிக்கும் பிரச்சினைகளையிட்டு நாம் ஒரு முடிவுக்கு வருவதற்கு முற்றிலும் அரசியல் வாதிகளையோ, பத்திரிகைகளையோ நம்பியிருப்பது எமது அறிவுச் சூன்யத்தைதயே காட்டுவதாகும். இதைத் தவிர்த்து, 'எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும், அப்பொருள் மெய்ப்பொருள் காணும் திறனை நாம் பெறுதல்வேண்டியது. ஜனநாயகம் உண்மையிலேயே மக்கள் ஜனநாயகமாக விளங்குவதற்கு அவசியமாகின்றது.

மக்கள் தமது வாக்குச் சக்தியை முறையாகப் பயன்படுத்துவதற்கு, தமது நாட்டிலுள்ள அரசியல், சமூக, பொருளாதாரநிலைகள்பற்றி நன்கு அறிந்திருக்கவேண்டும். அப்படி அறிந்திராதவர்கள், அறிய முற்பட வேண்டும். அப்படி அறிந்திராதவர்கள் அறியமுற்பட வேண்டும். அதுமட்டுமல்ல,

அண்டை அயல் நாடுகளில் நடைபெறும் சம்பவங்கள் நிகழ்ச்சிகளையும் சீர்தூக்கிப் பார்க்கவேண்டும். அவற்றின்

**நா**
**டு**
**ம்**

படிப்பினையை மனதிற் கொள்ள வேண்டும். எமது நாட்டு நிலையை அந்த நாடுகளின் நிலையுடன் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். இதற்கு உதவியாக உள்நாட்டு, அயல் நாட்டுப் பத்திரிகைகளை வாங்கி இவர்கள் படிக்க வேண்டும்.

### வாக்காளன் கடமை

ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை, தேர்தல் நெருங்கும் சமயத்தில் மாத்திரம், அந்த நேரத்தில் பெரும் பிரச்சினைகளாக விளங்கக் கூடியவற்றுக்கு அரசியல்வாதிகள் மேடைகளில் கூறும் வியாக்கியானங்களுக்கும், விளக்கங்களுக்கும் செவிசாய்த்து விட்டு, வாக்கெடுப்பு நிலையத்தில் இந்த அரசியல் வாதிகளின் பேச்சு காதுகளில் ரீங்காரம் செய்ய' ஏதோ இயக்கிவிடப்பட்ட யந்திரம் மாதிரித் தனது பொன்னான வாக்கை கொண்டு போய் போட்டுவிட்டு வீடு திரும்புவதில் திருப்தியடைந்து விடுவதல்ல உண்மையான, கடமையுணர்ச்சியுள்ள வாக்காளனின் செயல். இதைவிட மேலாக அரசியல் வாதியினும் ஒரு படி மேலே உயர்ந்து, பிரச்சினைகளை எதிர்காலக் கண்ணோட்டத்துடன் ஆராய்ந்து அவற்றுக்கான முடிவைத் தனது சுயசிந்தனைப் பலத்தாலேயேகாணுவதுதான் உண்மையான வாக்காளனின் பொறுப்பும், கடமையுமாகும்.

கணநேர உணர்ச்சி மனிதனின் வாழ்வையே பாதித்து விடுவதுபோல், ஒரு கால கட்டத்தில் பெரிதாகத் தோன்றும் வெறும் இன, மத, வேற்றுமை உணர்ச்சிகோ அல்லது வேறு அத்தகைய குறுகிய உணர்ச்சிக்கோ அடிமையாகித் தனது வாக்கை அளிப்பவன் தனது வாழ்க்கையை மட்டுமல்லாது, தனது சந்ததியினரின் வாழ்வையும் பாதிக்கவைத்துவிடுகிறான்.

வாக்காளன் தனது முழுப் பலத்தையும் உணர வேண்டும். அரசியல்வாதிகள் ஏதோ இலட்சியத்தால் உந்தப்பட்டு, [illegible] [illegible], ஆகவே அவர்கள் கூறுவதே

விவசாயப் புலம்

## விவசாயப் புலம்

## இளைஞர்கள் விவசாயத்தில் ஈடுபட வேண்டும்

### நாடு முன்னேற அதுவே வழி

—சிந்தனைச்செல்வன், யாழ்ப்பாணம்—

எமது நாடு அந்நிய நாட்டின் கைகளையே நம்பி, வாழ்ந்துகொண்டிருக்கிறது. ஆயிரம் ஆயிரமாக எம் நாட்டுப் பணம் அந்நிய நாட்டில் ஓடி ஒழிகின்றது.

### உணவுப்பிரச்னை ஏன்?

நாட்டிலே வேலையில்லாத் திண்டாட்டம்; உணவுப் பிரச்னை.

எதற்கெடுத்தாலும் பிற நாட்டையே நம்பிக் கொண்டிருப்பதால் நம் நாட்டிலே உணவுப்பிரச்னை தலைவிரித்தாடுகிறது. ஆரம்பத்தில் நாட்டிலே மாணவர்களுக்குப் புகட்டப்பட்ட கல்வி குறிப்பிட்ட ஒரு நோக்கிற்காக இருந்ததால், மாணவர்களும் குறிப்பிட்ட அந்த நோக்கை அடைய வேண்டும் என்ற எண்ணத்துடன் கல்வி கற்பதால், குறிப்பிட்ட நோக்கை அடைய முடியாது போக, தற்கொலையை ஒரு சில இளைஞர்கள் நாடுவதும் கண்கூடு.

"மலரோன்"

தேவவாக்கு என்று அவன் எண்ணக்கூடாது. தேர்தல் முடிந்து வெற்றிபெற்றதும், வாக்காளனுக்குப் பல வாக்குறுதிகளைத் தேர்தல் சமயத்தில் அளித்த வேட்பாளன் அவற்றைக் காற்றிலே பறக்கவிட்டுவிட்டுத் தனது பாராளுமன்ற ஆசனத்தைக் கெட்டியாகப் பிடித்துக் கொள்வதிலேயே அதிக சிரத்தை காட்டுவதன் தாற்பரியம் என்னவென்பது கடந்தகாலத் தேர்தல்கள் வாக்காளனுக்குப் படிப்பித்து இருக்கவேண்டும்.

### சொந்த முடிவு

இதன்காரணமாகத்தான், அரசியல்வாதிகளின் பேச்சுக்கு அளவுகடந்த மதிப்பு அளிப்பது தவறாகுமென்று நாம் சொல்கிறோம். வாக்காளன் எந்தப்பேச்சை எந்த அரசியல் வாதியின் வாயிலிருந்து கேட்டாலும், அந்தப்பேச்சில் அடங்கியுள்ள உண்மையைத் தனது சொந்த அறிவையும், அனுபவத்தையும், எதிர்காலத்தையிட்டு அவனிடமுள்ள தீர்க்கதரிசனத்தையும் கொண்டு ஆராய முற்படவேண்டும்.

கற்பனைக்கும் செயல் முறைக்குமுள்ள பெரிய இடைவெளியையும், அரசியல் அரங்கத்தின் சூட்சமங்களையும், அரசியல்வாதிகளின் சொல்லுக்கும் செயலுக்குமுள்ள வேற்றுமையையும், இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் ஆகியவற்றுக்கிடையேயுள்ள தொடர்புகளையும் வாக்காளன் நன்கு சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

### மாற்றுக்கட்சிகள்

ஒருகுறிப்பிட்ட அரசியற் கட்சிக்குச் சார்பான கொள்கையையுடைய வாக்காளன், அக்கட்சியின் அபேட்சகர் கூறுவதே எல்லாப் பிரச்சினைகளிலும் நியாயமானது, சரியானது என்று

(7ம்பக்கம் பார்க்க)

### காரணம் என்ன?

இந்நிலைக்குக் காரணம் விவசாயக்கல்வியையும், கைத்தொழிற் கல்வியையும் புறக்கணித்து, கல்வித் திட்டத்தை அமைத்ததேயாகும்.

ஆயிரம், ஆயிரம் ஏக்கர் காணிகள் அநாதரவான நிலையில் நம் நாட்டில் கிடக்கின்றன,

படிக்காத பாமரன் தான் விவசாயம் செய்ய வேண்டும் என்ற தப்பெண்ணத்தினால் தான் அநாதவரான நிலையில் இந்த நிலங்கள் கிடக்கவேண்டியுள்ளன.

### விவசாயக்கல்வி

சமுதாயத்தின் நலன்கருதி, நமது நாட்டின் வளர்ச்சி கருதி, எதிர்கால புதுச்சமுதாயத்தின் நலன் கருதி ஒவ்வொரு மாணவனுக்கும் கட்டாயம் விவசாயக் கல்வி கற்பிக்கப்படவேண்டும். ஆரம்பகாலத்தில் இருந்தே மாணவர்களுக்கு விவசாயக் கல்வி புகட்டப்படுவதின் மூலம் மாணவர்களின் கவனம் விவசாயத்தில் ஈடுபடும் என்பதில் எள்ளளவேனும் ஐயமில்லை.

இதை நன்குணர்ந்து மாணவர்களுக்குக் கல்வி புகட்டப்படவேண்டும். ஆரம்பகாலத்திலே விவசா

**நா**
**மு**
**ம்**

யக்கல்வி புகட்டப்பட்டால், எதிர்காலத்தில் உணவுக்காக மாற்றான் நாட்டினை எதிர்பார்க்கத் தேவையில்லை.

உத்தியோகம் இல்லையே என்ற குறையும் நாட்டிலே குறைந்து, தற்கொலையும் ஒழிந்து விவசாயத்தில் எல்லோரும் ஈடுபட்டு நாட்டை முன்னேற்றுவார்கள் என்பது வெளிப்படை. கல்வியின் அமைப்பில் மாறுதல் ஏற்படுத்தி, விவசாயத்தையும் கைத்தொழிலையும் கட்டாயப் பாடங்களாக்கி மாணவர்களுக்குப் போதிக்க ஒழுங்குகள் ஆசிரியர்களுக்குச் செய்து கொடுக்கப் படல் வேண்டும்.

### மாணவர் கடன்

மாணவர்களும், நாடு நமதே, நாட்டின் எந்த ஒரு தேவையும் நமது தேவை. நமது நாட்டை விட்டு வெளியே செல்லும் ஒவ்வொரு சதமும் நமது என்று எண்ணி நாட்டைப் பாதுகாக்க நாட்டின் தேவைகளைப் பூர்த்தி செய்ய வெளி நாடுகளுக்குச் செல்லும் பணத்தை நம் நாட்டிலே தடுத்து நிறுத்த முயல வேண்டும்.

விவசாயமும், கைத்தொழிலும் நாட்டின் இரு

(7-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்துக் கல்லூரி அபாரவெற்றி

## விளையாட்டுச் சங்க உதை பந்தாட்ட போட்டி

நல்லூர், ஞாயிறு

யாழ். விளையாட்டுச் சங்கத்தின் ஆதரவில் 2ம், 3ம் பிரிவுகளுக்கிடையே யாழ். இந்துக்கல்லூரிக்கும் யாழ். பரமேஸ்வராக் கல்லூரிக்குமிடையே யாழ். பரமேஸ்வராக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் தலா 2: 1 கோல்களால் யாழ். பரமேஸ்வராக்கல்லூரியை யாழ் இந்துக்கல்லூரி தோற்கடித்தது.

முதலில் நடைபெற்ற 3ம் பிரிவு ஆட்டத்தில் இரு கோஷ்டிகளுக்குமிடையே கடும் போட்டியாக இருந்தது. ஆரம்பத்தில் பரமேஸ்வராக்கல்லூரிதான் வெல்லும் அறிகுறியிருந்தது. பரமேஸ்வராக் கல்லூரி வீரர்கள் வெகு உற்சாகமாக விளையாடினார்கள். இடைவேளை வரையும் இரு கோஷ்டியினருக்கும் பெரும் பலப்பரீட்சையாக இருந்தது. இந்துக்கல்லூரி 2 கோல்களும், பரமேஸ்வரா ஒரு கோலும் எடுத்தன.

இப்போட்டிக்கு திரு. இ. கனகலிங்கம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்.

இதையடுத்து யாழ். இந்துக்கல்லூரிக்கும், பரமேஸ்வராக் கல்லூரிக்குமிடையில் 2ம் பிரிவுக்கான போட்டியும் பரமேஸ்வராக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இரு கோஷ்டியினரின் விளையாட்டும் போற்றத்தக்கதாயிருந்தது. விளையாட்டு வீரர்களை உற்சாகப்படுத்தும் வகையில் இருதரப்பு ஆதரவாளர்களின் கரகோஷமும், ஆரவாரமும் இருதரப்பினரையும் உற்சாகமூட்டியது. ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுக்காத வகையில் வெகுதிறமையாக விளையாடினர். இந்துக்கல்லூரிக் கோஷ்டியினர் தங்கள் முழுப் பலத்தையும் பிரயோகித்துப் பலமாக மோதினர். எனினும் பரமேஸ்வரா வீரர்களின் 'பாஸிங்' விளையாட்டு நன்றாக இருந்தது.

இப்போட்டி முடிவிலும் யாழ். இந்துக்கல்லூரி வீரர்கள் பரமேஸ்வராக் கல்லூரியை 3 0 கோல்களால் தோற்கடித்தனர்.

இப்போட்டிக்கு திரு. ஏ. சண்முகநாதன் மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்.

# அதிர் வெடிக்கிடையில் ஆரம்பமான உதைபந்தாட்டம்

## ரசிகர்கள் ஆரவாரம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

சென். பற்றிக்ஸ் கல்லூரிக்கும் சென். ஜோன்ஸ் கல்லூரிக்குமிடையில் நடைபெற்ற 1ம், 2ம் பிரிவுகளுக்கிடையான சிநேகபூர்வமான உதைபந்தாட்டப்போட்டிகளில் 2-ம் பிரிவுப் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது. 1-ம் பிரிவுப் போட்டியில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அமோகவெற்றி பெற்றது. ஆயிரக்கணக்கான இரசிகர்களுக்கிடையேயும், அதிர் வெடிகளுக்கிடையேயும் 2-ம் பிரிவுப் போட்டி முதலில் ஆரம்பமானது. சுறுசுறுப்புடனும் விறுவிறுப்புடனும் இருசாராரும் சமமாக மோதினர். சென். ஜோன்ஸ் வீரர்களின் திறமையான 'பாசிங்' விளையாட்டு எதிர்க்கோஷ்டியினரை திணறடித்தது. அடுத்தடுத்து இருகோல்களை சென். ஜோன்ஸ் போட்டது. இதை வாமதேவன், வாமசிலன் ஆகியவீரர்கள்போட்டிருந்தனர். சென். பற்றிக்ஸ் வீரரான பிரான்ஸிஸ் ஒரு கோலை மின்னல் வேகத்தில் வெளுத்து வாங்கினார். இடைவேளைக்கு சிலநிமிடங்களுக்குமுன் எதிர்பாராத விதமாக சென். பற்றிக்ஸுக்கு ஒரு 'பெனல்டி' கிடைத்தது. இதை இக் கோஷ்டியின் நவப்ராசா அடித்தார். அருமையான அடி! பந்து 'ஜிபிர்' என கோலுக்குள் பாய்ந்தது. இடைவேளையின்போது இருசாராரும் தலா 2—2 கோல்கள் பெற்றிருந்தனர். இடைவேளைக்குப் பின்னர் இருசாராரும் கடுமையாக மோதினர். பாராட்டுக்குரியபலப் பரீட்சையில் இரு கோஷ்டியும் ஈடுபட்டன. இதன் எதிரொலி இருசாராரும் ஒரு கோலையும் போடவில்லை. இப்போட்டிமுடிவில் இரு கோஷ்டியும் தலா 2—2 கோல்கள் பெற்று வெற்றி தோல்வியின்றி ஆட்டத்தை முடித்தன.

### 5 நிமிடத்துக்குள் 3 கோல்கள்

2-ம் பிரிவு ஆட்டத்தை அடுத்து 1-ம் பிரிவு ஆட்டம் விறுவிறுப்பாக ஆரம்பமானது. இரு சாராரும் நிதானம் தவறாது கடுமையாக மோதினர். ரசிகர்களின் சீழ்க்கை அடிகளும் பலத்த 'அப்பிளாஸும்' போட்டியின் தரத்தை எடுத்துக்காட்டிக் கொண்டிருந்தது. போட்டி காரசாரமாக நடந்து கொண்டேயிருந்தது ஒருவரும் விட்டுக்கொடுப்பதாகக் காணப்படவில்லை. இடைவேளைக்கும் நேரமானது. அந்த நேரத்தில் சென். பற்றிக்ஸ் வீரரான பீரிஸ் கோல் கம்பத்துக்கு வெகு தூரத்திலிருந்தே ஒரு விறைப்பான உதைகொடுத்தார். மின்னல் வேகத்தில் பந்து மேல் கோல் கம்பத்தில்பட்டு உள்ளே பாய்ந்தது அருமையானகோல்! அதிர்வெடிகளும், சீழ்க்கை அடிகளும் விண்ணைப் பிளந்தன. இடைவேளையின் போது சென். ஜோன்ஸ் ஒரு கோலும் பெறாதவகையில் சென். பற்றிக்ஸ்ஒருகோலைப் பெற்றிருந்தது. இடைவேளையின்பின் சென். பற்றிக்ஸ் ஒரு புது உற்சாகத்துடன் மோதியது. சுற்றிவளைத்து பந்தை எதிர்க்கோஷ்டியின்பக்கம் அடைத்துக்கொண்டனர் சென். பற்றிக்ஸ் வீரர்கள். சென் ஜோன்ஸ் திண்டாடியது. சென். பற்றிக்ஸ் வீரர் வெற்றிவேலு கோல்கள் போடுவதில் ஒரு புலி. அடுத்தடுத்து இரு கோல்களை உதைத்தார். ஜேக்கப், ஜோசப் என்னும் வீரர்கள் தொடர்ந்து ஆளுக்கொரு கோலைப்போட்டனர். 5நிமிடத்தில் சென். பற்றிக்ஸ் 3 கோல்களைப்பெற்றது. எனினும் சென். ஜோன்ஸ் வீரரான விநாயகமூர்த்தி போட்டிமுடியும் தறுவாயில் ஒரு கோலை அழகாகப்போட்டார். சென். ஜோன்ஸ் குகவரதராசனின் விளையாட்டு ரசிக்கக்கூடியதாக இருந்தது. இப்போட்டி முடிவில் சென். பற்றிக்ஸ் கல்லூரி 5—1 கோல்களால் சென். ஜோன்ஸ் கல்லூரியை அமோக வெற்றியீட்டியது.

## சமாதான நீதிபதிக்கு வரவேற்பு

யாழ்ப்பாணம், ஞாயிறு

"ஆசிரியர்கள் பாடசாலைப் படிப்போடு மாத்திரம் நின்றுவிடாமல் எமது கல்வி கலாசாரத்துக்கும் சமூகத்திற்கும், திரு. ஆசீர்வாதம் போல் பணிபுரிய முன்வர வேண்டும். திரு. ஆசீர்வாதம் யாழ்ப்பாணத் தமிழாசிரியர் சங்கத் தனாதிகாரியாக இருந்து ஆற்றிய சேவைகளை நாம் மறக்கமுடியாது. அவர் இயற்றிய கணிதப் புத்தகங்களை ஆசிரியர்கள் மாணவர்கள், பெற்றோர்கள் யாவரும் அறிவர். தமிழ்க் கல்வி உலகில் அழியாத இடத்தைப் பெற்றுவிட்டார். சமாதான நீதிபதிப் பட்டம் இடைத்தமையால் அவருக்குப் பெருமையில்லை. அந்தப் பட்டத்திற்கு அவராலேதான் மதிப்பேற்பட்டுள்ளது." இவ்வாறு திரு. மு. வி. ஆசீர்வாதம் ஜே.பி.யைக் கௌரவிக்குமுகமாக யாழ்ப்பாணத் தமிழாசிரியர் சங்கத்தினால் அளிக்கப்பட்ட வரவேற்பின்போது மேற்படி சங்கத் தலைவர் திரு. இ. பொ. குமாரசாமி கூறினார்.

சமாதான நீதிபதியின் குணாதிசயங்களைப் பற்றியும் ஆசிரியர்களுக்கு அவரது புத்தகங்கள் பெரிய உதவியாக உள்ளனவென்பதைப் பற்றியும், திரு. ஆசீர்வாதம் போன்றவர்களால் தமிழாசிரியர் மதிப்பு உயர்ந்துள்ளதென்றும் வட இலங்கைத் தமிழாசிரியர் சங்கத் தலைவர் பண்டிதர் ச. பொன்னுத்துரை கூறினார். ஆசிரியமணி திரு. நா. தம்பிரெத்தினம், அகில இலங்கைத் தமிழாசிரியர்சங்கத் தலைவர் திரு. இ. கந்தையா, பொதுக் காரியதரிசி திரு. க. இ. குமாரசாமி ஆகியோரும் சமாதான நீதிபதியைப் பாராட்டிப் பேசினர்.

திரு. ஆசீர்வாதம் தம்மைக் கௌரவித்தமைக்கு நன்றி கூறினார். ஈற்றில் யாழ்ப்பாணத் தமிழாசிரியர் சங்கக் காரியதரிசி திரு. இ. செல்வராசா நன்றியுரை வழங்கினார்.

## சமாதானநீதவானுக்கு பாராட்டு

வல்வெட்டித்துறை, ஞாயிறு

'பகைமையைச் சாதிக் காழ்ப்பையும் உடனே மறந்துவிடுகின்ற தன்மையினாலேதான் வல்வெட்டித்துறை மக்கள் ஒருவரோடொருவர் ஒற்றுமையாக வாழ்கின்றார்கள் கிறிமினல் குற்றச் சம்பவங்கள் மிகவும் அரிதாக இருக்கும் இரகசியமும் இதுவே'.

இவ்வாறு பருத்தித்துறை எம்.பி. திரு. க. துரைரத்தினம், இளைப்பாறிய தபால் தந்திப்பகுதி நுண்ணாய்வுப் பரிசோதகர் திரு. ச. ஞானமூர்த்தி சமாதானநீதவான் பட்டம்பெற்றதைப் பாராட்டுமுகமாக நடைபெற்ற பாராட்டு விழாவில் பேசுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

பட்டினசபைத் தலைவர் திரு. எம். வி. இரத்தினவடிவேலு தலைமையில் சிதம்பராக்கல்லூரியில் இவ்வைபவம் நடைபெற்றது.

வல்வை பொதுமக்கள் சார்பில் பாராட்டுப்பத்திரம் பட்டினசபைத் தலைவரால் வாசித்துக்கையளிக்கப்பட்டது. திரு. எஸ். வேற்பிள்ளை திரு. ஞானமூர்த்தியின் சேவையைப் பாராட்டிப் பேசினார். திரு. ஞானமூர்த்தி தமக்களிக்கப்பட்ட உபசரிப்புக்கு நன்றி தெரிவித்துக்கொண்டார்.

சென். ஜோன்ஸ் மைதானத்தில் நடைபெற்ற இவ்விரு போட்டிகளுக்கும் முறையே திரு. [illegible] ஸ் மத்தியஸ்தம் வகித்தனர்.

# சிநேகபூர்வமான உதை பந்தாட்டம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ். மத்திய கல்லூரிக்கும், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் இடையே நடைபெற்ற சிநேகபூர்வமான 1-ம் 2-ம் பிரிவு உதைபந்தாட்டப் போட்டிகளில் 2-ம் பிரிவுப் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிந்தது 1-ம் பிரிவுப் போட்டியில் மத்தியகல்லூரி வெற்றி பெற்றது. முதலில் நடைபெற்ற 2-ம் பிரிவுப் போட்டி ஆரம்பத்தில் இருந்துமுடிவுவரையும் காரசார மானதாகவும், ரசிப்பானதாகவும் காணப்பட்டது. எனினும் யாழ்ப்பாணக்கல்லூரி மத்தியமுன்னணி வீரர் பந்தை அற்புதமாக அடித்து ஒரு கோல் பெற்றார் மத்தியகல்லூரி முன்னணி வீரர்களின் சிறந்த 'பாசிங்' விளையாட்டின் பயனாக ஆனந்தராசா என்னும் முன்னணி வீரர் மின்னல் வேகத்தில் ஒரு கோலைப் போட்டார். இடைவேளையின் போது இரு கோஷ்டியும் தலா ஒவ்வொரு கோல்கள் பெற்றிருந்தன. இடைவேளையின்பின் இரு சாராரும் விட்டுக்கொடுக்காமல் கடுமையாக மோதினர். இப்பலப்பரீட்சையின் காரணமாக ஒருவருமே கோல்கள் போடவில்லை. இப்போட்டியில் இரு கோஷ்டியும் 1-1 கோல்கள் பெற்று வெற்றி தோல்வியின்றி ஆட்டத்தை முடித்தன.

### பலமானமோதல்

2-ம் பிரிவை அடுத்து நடைபெற்ற 1-ம் பிரிவு ஆட்டம் இடைவேளையின் பின்னர்தான் ரசிக்கக்கூடியதாகக் காணப்பட்டது. மத்திய கல்லூரி வீரர்களின் சிறந்த 'பாசிங்' விளையாட்டு எதிர் கோஷ்டி வீரர்களை திணறவைத்தது. எனினும் அவர்கள் விட்டுக்கொடுக்காமல் பலமாக மோதினர். அதன் பலனாக பல கோல்கள் அடிக்கும் சந்தர்ப்பங்கள் அவர்களுக்கு கிடைத்த போதும் அவற்றைத் தவறவிட்டனர். மத்திய கல்லூரி வீரர் புவனேந்திரன் தனக்குக் கிடைத்த சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தி அடுத்தடுத்து இரு கோல்களை போட்டார். இடைவேளையின் போது எதிர் கோஷ்டி ஒன்றும் பெறாத வகையில் மத்திய கல்லூரி இரு கோல்களைப் பெற்றிருந்தது.

இடைவேளைக்குப் பின் [illegible] தரம் உயர்வாக [illegible] காணப்பட்டது. இதன் [illegible] மத்திய கல்லூரி [illegible] முன்னணி வீரர் [illegible] சத்தியதேவாவின் உதவியுடன் வலதுமுன்னணி வீரர் அல்வின் மின்னல்

(8-ம்பக்கம் பார்க்க)

## நாட்டு விவகாரம்...

(6-ம்பக்கத் தொடர்ச்சி)

தன்னைத்தானே ஏமாற்றிக் கொள்வதும் மடமையாகும். மாற்றுக் கட்சியினரின் கூட்டங்களுக்கும் செல்ல வேண்டும். மாற்றுக் கட்சித் தலைவர்கள் ஒவ்வொருபிரச்சினைகளுக்கும் கூறும் வழிவகைகளையும், நாட்டு மக்களின் நன்மைக்கென அவர்கள்முன் வைக்கும் திட்டங்களையும் கேட்டறிந்து, அவற்றில் நன்மையுண்டு எனறு கண்டால்அவற்றுக்கு ஆதரவு தெரிவிக்கவும் வாக்காளன் தயங்கக்கூடாது. வாழ்க்கையே நிலையற்றபோது, கட்சிகளும் கொள்கைகளும் எம்மாத்திரம்?

ஒவ்வொரு பிரச்சினையையும், அதன் வெவ்வேறு அம்சங்களையும், பிரச்சினை நடைபெறும் சூழ்நிலையையும் நாம் நன்றாகக் கற்றறிந்தபின்னரே, அப்பிரச்சினையைவிட்டு ஏதாவது திட்டவட்டமான முடிவுக்குவர நாம் முயலவேண்டும்.

### அரசியல் விழிப்புணர்ச்சி

சுருங்கச் சொன்னால், மக்களிடையே அரசியல் விழிப்புணர்ச்சி ஏற்பட வேண்டும் என்றவிஷயத்தையும் தனது உடனடிச் சுயநலத்துக்காகவும், வசதிக்காகவும் பயன்படுத்த எத்தனிக்காது, தமது எதிர்காலத்தையும், தமது சந்ததியினரின் எதிர்காலத்தையும், தாம் வாழும் நாட்டின் பொது நலனையும் முன்வைத்தே அணுகவேண்டும்.

உண்மையான அரசியல் விழிப்புணர்ச்சிஎமது நாட்டு மக்களிடையே ஏற்பட்டால் தான் அரசியல்வாதிகளும், வகுப்புவாதம், இனபேதம், மொழிப்பிரச்சினை என்று திருப்பித் திருப்பிப் பேசாமல், நாட்டின் முக்கிய பொருளாதாரப் பிரச்சினைகள், வேலையில்லாத் திண்டாட்டம், எதிர்காலத்துக்கான நல்ல சமூக, பொருளாதாரத்திட்டங்கள் ஆகிய விஷயங்களையிட்டு அதிகம் பேசவும், நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் முனைவார்கள்.

ஆகவே, இன்றைய சூழ்நிலையில் மக்கள் அரசியல்வாதிகளைத் திருத்தவேண்டிய புனிதபணியினை மேற்கொள்ள முன்வரவேண்டும். இதற்கான அடிப்படையில்: மக்கள்தம்மைத்தாமே தயாரித்துக்கொள்ளவேண்டும் அவர்கள் தமது பலம் வாய்ந்த ஆயுதமாகத் தமதுவாக்குரிமையை நாட்டின் நலனுக்காகப் பயன்படுத்தவேண்டும்.

## வெற்றி-தோல்வி இல்லை

சுழிபுரம், ஞாயிறு

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி இரண்டாம் பிரிவு மாணவ கோஷ்டிக்கும் அளவெட்டி அருணோதயாக் கல்லூரி இரண்டாம் பிரிவு கோஷ்டிக்குமிடையே சிநேகபூர்வமாக நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் இரு கோஷ்டியினரும் இரண்டு கோல் விதம் சமனாகப் பெற்றதால் ஆட்டம் வெற்றி தோல்விஇன்றி முடிவடைந்தது போட்டி சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி விளையாட்டுமைதானத்தில் நடைபெற்றன.

### அருணோதயா வெற்றி

மேற்படி கல்லூரிகளின் மூன்றும் பிரிவு கோஷ்டிகளுக்கிடையே நடைபெற்ற போட்டியில் அருணோதயாக் கல்லூரி கோஷ்டியினர் 4-1 கோல்களால் வெற்றி பெற்றனர்.

## இளைஞர்கள்...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

கண்மணிகள் என்ற எண்ணத்துடன் அவற்றிலே கவனம் செலுத்தி நாட்டின் முன்னேற்றத்திற்கு உழைக்க முன்வரவேண்டும்.

நான் முன்னேறினால், எனது குடும்பம் முன்னேறுகிறது. குடும்பம் முன்னேறினால் சமுதாயம் முன்னேறுகிறது. சமுதாயத்தின் முழு வளர்ச்சியால் தான் நாடு நலமுடன் திகழ்கின்றது என்பதை ஒவ்வொருவரும் உணரவேண்டும்.

குடும்பத்தின் நலன் கருதி எவன் விவசாயத்திலும், கைத்தொழிலிலும் ஈடுபடுகிறானோ அவன் முழு இலங்கையின் நலன் கருதியே விவசாயத்திலும், கைத்தொழிலிலும் ஈடுபடுகிறான் என்பதில் எள்ளளவேனும் ஐயத்திற்கு இடமில்லை.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர்களுக்கென ஒரு சாஸனம்

## ஐ.நா. கல்வி ஸ்தாபனம் உருவாக்கியுள்ளது

பாரிஸ், அக். 15

ஆசிரியர்களுக்கான சாஸனம் ஒன்றை ஐ. நா. கல்வி கலாசார ஸ்தாபனம் தயாரித்துக்கொண்டிருக்கின்றது.

ஆசிரியர்களின் வேலை, அந்தஸ்து, உரிமை, பொறுப்பு போன்ற விஷயங்களை இந்த சாஸனம் வலியுறுத்துகின்றது.

ஆசிரியர்களுக்கு முதுமையில் ஓய்வு, சம்பளம், வேலை நேரம், வேலைக்கு சேர்தல், வேலை தரம் ஆகிய அம்சங்களும் இந்த சாஸனத்தில் இடம்பெற்றுள்ளன. பாரிஸில் நடைபெற்ற சமூக கல்வி கலாசார ஸ்தாபனத்தின் மகாநாட்டில் 80 நாடுகளைச்சேர்ந்த 230 கல்வி நிபுணர்கள் கலந்துகொண்டனர்.

# மயங்கி விழுந்து மாணவர் மரணம்

திருநெல்வேலி, ஞாயிறு.

பாடசாலை விட்டு வீட்டுக்குச்செல்லு போது வீதியில் திடீரென மயக்கம்போட்டு விழுந்ததால் இராசையா சுவாயராசா என்ற மாணவன் மரணமான சம்பவம் ஒன்று நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.

யாழ்ப்பாணம் ஸ்டான்லி வீதியைச் சேர்ந்த இராசையாவின் மகனான சுவாயராசா (12 வயது) என்ற மாணவன் ஆனைப்பந்தி குருநாதர் கோவில் வித்தியாலயத்தில் படிப்பதாகவும், பாடசாலை விட்டு வீட்டுக்குப் போகையிலேயே இவர் திடீரென விழுந்து மரணமானதாகவும் மரண விசாரணையின் போது தெரியவந்தது. திடீர் மரண விசாரணை அதிகாரி எஸ். [illegible]ரத்தினம் [illegible] விசாரணை நடத்தினார்.

மேற்படி [illegible] ஆசிரியையான [illegible] தமது [illegible] சாட்சியமளிக்கையில் குறிப்பிட்டதாவது:

''காலஞ்சென்றவருக்குப் பின்னால் நான் வீட்டுக்குப் போகும்போது சென்று கொண்டிருந்தேன். வழியில் அவர் மயக்கம் போட்டு நிலத்தில் விழுந்தார். உடனே அவரைத் தூக்கி அருகிலுள்ள கடையொன்றில் கிடத்தி, தண்ணீர் தெளித்துவிட்டு, யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு சென்றோம், அங்கு அவர் இறந்துவிட்டதாக டாக்டர் தெரிவித்தார்.

காலஞ்சென்றவரது தந்தையான இராசையா சாட்சியமளிக்கையில் காலஞ்சென்றவர் நல்ல உடலுறுதியுள்ளவர் என்றும், அவர் இரட்டைக்குழந்தைகளில் ஒருவர் என்றும். இவருடன் பிறந்த மற்றைய குழந்தை இரண்டு வருஷங்களின் முன்னர் நாய் கடித்து இறந்துவிட்டார் என்றும், இவரது தாயார் சுகயீனம் காரணமாக யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் கடந்த இரண்டு வார காலமாக இருந்துவருகின்றார் எனவும் தெரிவித்தார்.

பிரேத பரிசோதனை செய்த யாழ்ப்பாணம் சட்ட வைத்திய அதிகாரி உடல் உள்ளுறுப்புகளை அரசாங்க பரிசோதனைக்காக அனுப்பி வைத்துள்ளார். தீர்ப்பு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

# பல்கலைக் கழகங்களில் மாணவர்களின் 'சேஷ்டை'

## ஒழித்துக்கட்ட மந்திரி உத்தரவு

கொழும்பு, சனி

பல்கலைக்கழக போதனாசிரியர்கள் கோஷ்டியின் அமைதியைக் கொல்லும் பழக்கத்தை ஒழித்துக்கட்டும்படி பல்கலைக்கழக அதிகாரிகளுக்கு கல்வி மந்திரி உத்தரவிட்டுள்ளார்.

பல்கலைக்கழக மாணவர்களுக்கிடையில் நடைபெறும் 'சேஷ்டை'களை உடனடியாக நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கும்படியும் மந்திரி பல்கலைக்கழக அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

மாணவர்கள் நடத்தும் 'சேஷ்டை'களைப் பொறுத்துக்கொண்டிருக்கமுடியாது. சிரேஷ்ட மாணவர்கள் புதிய மாணவர்களை 'சேஷ்டை' செய்து கேலி செய்வது அருவருப்பான விஷயம் என்று மந்திரி குறிப்பிட்டுள்ளார்.

இதற்கிடையில் சமீபத்தில் பேராதனைப் பல்கலைக்கழக வைத்திய பிரிவில் இடம்பெற்ற 'சேஷ்டை'கள் சம்பந்தமாக நடைபெற்றுள்ள விசாரணைகளில் குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாக அறியப்படுகின்றது. இவர்கள் உபவேந்தரின் முன்னிலையில் ஆஜர்செய்யப்பட்டு தண்டிக்கப்படுவர் என்று தெரிகின்றது.

# தோலகட்டி ஆச்சிரம துறவி காலமானர்

மாவிட்டபுரம், சனி

தோலகட்டி ஆச்சிரம துறவி திரு. போல் ஜெயசிங்கா நேற்றிரவு மார்புவலி காரணமாக தமது 69-வது வயதில் காலமானர்.

இவர் பாரிஸ்டராக தொழில் புரிந்து பின்னர் அத்தொழிலைக் கைவிட்டு இந்த ஆச்சிரமத்தில் சேர்ந்து துறவியாகித் தொண்டாற்றினர். நேற்றிரவு மார்புவலி ஏற்பட்டு காங்கேசன்துறை ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்ட சிறிது நேரத்தில் காலமானர் எனத் தெரிக்கப்பட்டது.

# இளவாலை வாசிக்கு ஆறுதல் பரிசு

பண்டத்தரிப்பு, சனி

சென்ற மாதம் 29-ந் திகதி தேசிய லொத்தர் சபையாரால் நடாத்தப் பெற்ற 109-வது சுவீப்பில் இளவாலை வாசியான திரு. கே. கனகரத்தினம் என்பவருக்கு 1415-ரூபா -80 சதம் கிடைத்துள்ளது.

# ஐந்து லட்சம் ரூபாய் அமெரிக்கா வழங்கும்

## வெள்ள நிவாரணத்துக்கு உதவி

கொழும்பு, ஞாயிறு

**இலங்கையில் அண்மையில் ஏற்பட்ட மழையினலும், வெள்ளத்தினலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்கென அமெரிக்க அரசாங்கம் 5 லட்சம் ரூபாயை இலங்கை அரசாங்கத்துக்கு கொடுத்து உதவ இருக்கின்றது.**

நாட்டில் சமீபத்தில் ஏற்பட்ட வெள்ளக் கஷ்டங்களுக்காக இதுவரை கிடைத்துள்ள உதவிகளில் அமெரிக்காவிடமிருந்து கிடைக்கும் உதவியே மிகப் பெரியது.

அமெரிக்கா இலங்கைக்கு வழங்கவிருக்கும் இந்த உதவி பற்றி நேற்று இலங்கையில் உள்ள அமெரிக்கத் தூதரக பொறுப்பதிகாரி திரு. காரிஸ் சோலன் பிரதம மந்திரியைச் சந்தித்துக் கையளித்த ஒரு கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பணத்தை வெள்ளத்தினல் பாதிக்கப்பட்டவர்களுக்கு வீடுகள் கட்டவும், நஷ்டங்களுக்குள்ளான விவசாயிகளுக்கு விதைநெல் வாங்கவும் பயன்படுத்துமாறு அமெரிக்க அரசாங்கம் இலங்கையைக் கேட்டிருக்கின்றது.

1957-ல் ஏற்பட்ட வெள்ளக் கஷ்டங்களின் போதும் 1965-ல் ஏற்பட்ட புயல் கஷ்டங்களின் போதும்கூட அமெரிக்க அரசாங்கம் கணிசமான அளவு இலங்கைக்கு உதவியிருக்கின்றது.

இலங்கைக்கு வெள்ளத்தினல் ஏற்பட்டுள்ள கஷ்டங்கள் குறித்து அமெரிக்க அரசாங்கத்தின் அனுதாபத்தை திரு. சோலன்ஸ் பிரதம மந்திரிக்குத் தெரிவித்ததுடன் அரசாங்கமும், மக்களும் தம் கஷ்டங்களைப் போக்கிக் கொள்வதில் பிறரை எதிர்பாராமல் தாமே சமாளித்துக்கொண்டது குறித்தும் மகிழ்ச்சி தெரிவித்துள்ளார். வெள்ள அகதிகளும் தமக்குத் தாமே உதவிக்கொண்டதையும் அவர் பாராட்டியுள்ளார்.

அண்மையில் இலங்கையில் ஏற்பட்ட வெள்ளத்தினல் களுத்துறை, இரத்தினபுரி, காலி ஆகிய இடங்கள் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

# சுவீப் அதிர்ஷ்டசாலிகள்

கொழும்பு, சனி

நேற்று இழுக்கப்பட்ட 111-வது தேசிய சுவீப் சீட்டிழுப்பில் பரிசு பெற்ற டிக்கட்டுகள் வருமாறு:

1-வது பரிசு

39 T 0237 ரூ 99,460

2-வது பரிசு

03 B 0129 ரூ 39,284

3-வது பரிசு

23 G 0059 ரூ. 9,946

தலா 497 ரூபா 30 சதம் கொண்ட 100 ஆறுதல் பரிசுகள்:-

| | |
|---|---|
| 35 H 0489 | 32 E 0944 |
| 16 H 0135 | 16 T 0520 |
| 40 R 0687 | 28 G 0011 |
| 37 Z 0355 | 23 Y 0134 |
| 19 W 0863 | 15 B 0848 |
| 30 T 0891 | 24 L 0319 |
| 35 O 0328 | 02 N 0897 |
| 01 C 0203 | 32 C 0271 |
| 37 A 0092 | 25 F 0741 |
| 27 N 0162 | 36 J 0149 |
| 12 F 0531 | 09 M 0575 |
| 35 Y 0168 | 28 M 0620 |
| 37 U 0610 | 12 F 0821 |
| 03 O 0670 | 16 K 0653 |
| 38 G 0349 | 16 X 0521 |
| 11 D 0871 | 01 M 0966 |
| 18 Q 0007 | 18 R 0899 |
| 12 V 0903 | 30 P 0712 |
| 31 A 0939 | 40 M 0534 |
| 36 D 0886 | 20 F 0788 |
| 32 Z 0429 | 29 F 0235 |
| 01 L 0 69 | 04 N 0508 |
| 31 F 0309 | 36 N 0446 |
| 12 E 0085 | 09 L 0961 |
| 23 W 0619 | 06 U 0944 |
| 26 M 0273 | 32 E 0574 |
| 21 H 0383 | 36 Z 0397 |
| 13 H 0837 | 24 T 0503 |
| 21 E 0639 | 23 O 0370 |
| 36 B 0024 | 01 X 0859 |
| 24 S 0472 | 28 P 0201 |
| 39 S 0707 | 28 E 0936 |
| 26 V 0930 | 25 B 0868 |
| 08 T 0870 | 16 P 0220 |
| 05 X 0547 | 26 C 0955 |
| 01 V 0545 | 40 K 0249 |
| 19 V 0670 | 05 U 0739 |
| 01 A 0026 | 25 R 0267 |
| 40 A 0424 | 14 H 0620 |
| 03 V 0414 | 03 G 0342 |
| 18 G 0844 | 30 P 0192 |
| 22 E 0651 | 04 G 0571 |
| 02 G 0563 | 26 N 0560 |
| 38 L 0350 | 40 U 0910 |
| 23 A 0019 | 04 C 0034 |
| 19 V 0408 | 18 L 0068 |
| 02 O 0388 | 30 H 0195 |
| 32 Z [illegible] | 16 O [illegible] |
| [illegible] W 0023 | 36 J 0848 |
| 21 V 0064 | 13 W 0936 |

# கோண்டாவிலில் கைகலப்பு

## மூவர் படுகாயம்; இருவர் கவலைக்கிடம்

திருநெல்வேலி, ஞாயிறு

கோண்டாவிலில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஒரு பயங்கரச் சண்டையின் விளைவாக மூவர் படுகாயமுற்ற நிலையில் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் இருவரின் நிலைமை கவலைக்கிடமானதாக இருக்கின்றது எனத் தெரியவருகின்றது.

கோண்டாவிலைச் சேர்ந்த அம்பலவர் செல்லையா, ஆறுமுகக்குட்டி செல்வரட்ணம். வல்லிபுரம் நடராசா ஆகியோரே இச்சண்டையில் காயமுற்றவர்களாகும். கோடரிகளாலும், கத்திகளாலும், தடிகளாலும் தாக்கப்பட்டு, மண்டை, கை, கால் ஆகிய இடங்களில் படுகாயங்களுடன் இவர்கள் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கோண்டாவில் அன்னுங்கையைச் சேர்ந்த பலநோக்கு கூட்டுறவுச் சங்கக் கூட்டத்தில் அங்கத்தவர்களைச் சேர்க்கும் விஷயமாகத் தீர்மானிக்கையிலேயே இந்தக் கைகலப்பு ஏற்பட்டதாக பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

கோப்பாய் பொலிஸாருக்குச் செய்யப்பட்டுள்ள புகாரில், சுகாதார பரிசோதகரான ரி. தர்மலிங்கம், கனகரட்ணம் சின்னராசா, சி. பத்மநாதன், சு. சிவசுப்பிரமணியம், பொ. பாலசுப்பிரமணியம், எஸ். மகாலிங்கம் ஆகிய ஆறுபேர் மீதும் குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

கோப்பாய் பொலிஸார் புலன் விசாரணை செய்கின்றனர்.

## இனப்பாகுபாடு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அடுத்த வருடம் தொடக்கம் மார்ச் 21-ந் திகதி நாடெங்கிலும் ஐ. நா. இனப்பாகுபாடு எதிர்ப்புத் தினமாகக் கொண்டாடப்படும்.

## பண்டாரவளை . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

செய்து பல கூட்டங்களில் கலந்துகொள்வார். சமசமாசக்கட்சித் தலைவர் திரு. என். எம். பெரேராவும் இக் கூட்டங்களில் கலந்துகொள்வார்.

சமசமாஜ, கம்யூனிஸ்ட் கட்சிகளின் கட்டுப்பாட்டில் இயங்கும் தொழிற்சங்கங்கள், சுதந்திரக் கட்சியின் சார்பில் அபேட்சகராகப் போட்டியிடும் திரு. ஆர். எம். அப்புஹாமியை ஆதரிக்கும்படி தோட்டத்தொழிலாளரைக் கேட்டு வருகின்றன.

## சிநேகபூர்வமான...

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

வேகத்தில் முன்றுவது கோலைப் போட்டார். யாழ்ப்பாணக் கல்லூரியும் இடது முன்னணி வீரரின் உதையின் பயனாக ஒரு கோல் பெற்றது. இப்போட்டி முடிவில் மத்திய கல்லூரி 3—1 கோல்களால் யாழ்ப்பாணக் கல்லூரியை வெற்றியீட்டியது. யாழ் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இப் போட்டிக்கு திரு. பி. ஏகாம்பரம் மத்தியஸ்தம் வகித்தார்.

## வேலைவாய்ப்பு

வவனியா, ஞாயிறு

நாட்டில் உள்ள வேலையில்லாப்பிரச்சினையைத் தீர்ப்பதன் நோக்கத்துக்காக வவனியா மாவட்டத்தில் இவ்வருடம் மாத்திரம் 7 நெசவு நிலையங்கள் ஐக்கியகிராம அபிவிருத்தி சிறு குடிசனக் கைத்தொழில் பகுதி திட்டமிட்டு கட்டப்பட்டன. ஆனல் இதில் ஐந்து அடுத்த மாதத்தில் வேலைகள் செய்ய ஆரம்பிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றன.

இதால் இம்மாவட்டத்தில் சுமார் 150 பேர்களுக்கு விரைவில் வேலைவாய்ப்பு கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகின்றன. இடையில் நேர்முகப்பரீட்சைகள் எல்லாம் நடந்து முடிவடைந்துவிட்டன. இவ் ஆலைகள் வேலைசெய்யத் தொடங்கினல் இதை மேலும் விஸ்தரிக்கும் நோக்கமும் இருப்பதாக அறியப்படுகின்றது.

## புள்ளி விபரம்

வவனியா, ஞாயிறு

வவனியா மாவட்டத்தில் உள்ள சகல இடங்களிலும் விளையும் பொருட்களின் புள்ளி விபரம் எடுப்பதன் பயனுல்தான் நாட்டில் எவ்வளவு விளைச்சல் ஏற்படும் என்பதை அறியமுடியும் என்றும் விளைச்சலை அதிகரிக்கலாமென்றும் வவனியா அரசாங்க அதிபருக்குப் புள்ளிவிபர அதிகாரி அறிவித்துள்ளார்.

## மரம் நாட்டு விழா

வவனியா, ஞாயிறு

வவனியா கோவில்புதுக்குளத்தில் 17-ம் திகதி மரநாட்டு விழா வவனியா அரசாங்க அதிபர் திரு. பி. சி. பெரேரா தலைமையில் நடைபெறவிருக்கின்றது.

இந்த விழாவில் வவனியா மாவட்ட விவசாய விஸ்தரிப்பு உத்தியோகத்தர் திரு. எஸ். நடேசன் உட்பட பல பேச்சாளர்கள் உரைநிகழ்த்துவார்கள்.

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலவீதி, 63-ம் [illegible] அவர்களது அச்சகத்தில் 1966-ம் ஆண்டு [illegible] மாதம் 17-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org